உ

குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 5 | 1906 ஞு ஜூலைமீ | புத்தகம் 7

செவிடர் ஊமையர்களின் பாடசாலை.

நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்று மூன்றுபேர் வரை நிரக்ஷரகுக்ஷிகளாயிருக்கிறார்களென்பது ஜன கணிதக்கணக்கால் விளங்குகின்றது. படிக்கத்தக்க பருவமுடையவர்களில் கால்வாசியும் படிக்கவில்லையென்பதும விளங்குகின்றது. அவர்கள் விஷயத்திலும் பொதுஜனக் கல்வி யபிவிருத்தி விஷயத்திலும் கவரன்மெண்டார் படாதபாடெல்லாம் பட்டு உழைக்கக் கருத்துக்கொண்டிருக்கிறார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற விஷயம்.

ஆனால் இது விஷயத்தில் நாமும் நம்மால் இயன்றமட்டும் கவலையெடுத்துக்கொண்டு உழைத்துவந்தாலொழிய கவரன்மெண்டாருடைய உழைப்பால் மட்டும் கல்வி யபிவிருத்தியாகமாட்டாது. இக்கல்வி யபிவிருத்தி விஷயத்தில் நாம் நம் முன்னோர்களையும் தற்கால அமெரிக்கர்களையும் பின்பற்றி நடத்தல் நலம்.

சென்றமாதத்தில் சொந்தக்காரியமாக பாளையங்கோட்டைக்குப் போயிருக்குந் தருணத்தில் அவ்வூர் செவிடர் ஊமையர் பாடசாலையைப்பார்க்க ஆசைகொண்டு கல்வியிற் சிறந்த எமது இரு நண்பர்களுடனும் அன்னவர் குழந்தை குட்டிகளுடனும் ஒருநாட் காலையில் புறப்பட்டோம். பாளையங்கோட்டை முனிசிபாலிட்டியின் சுகாதார விஷயங்களை மேற்பார்ப்போராகிய நண்பர் எங்களை கூட்டிச்சென்றனர். அப்பள்ளிக்கூடம் வாசற்கதவுப்புறம் ஒரு பெரும்பலகை எழுத்துக்களுடன் காணப்பட்டது. அதனை உற்று நோக்கவே செவிடர்

களுக்கும் ஊமையர்களுக்கும் ஏற்பட்ட தர்மபாடசாலை யென்றறிந்தோம். எங்களை யிட்டுக்கொண்டுவந்த நண்பர் எங்களை வாசற்புறத்தில் நிறுத்திவிட்டு அப்பாடசாலையை மிகச்சிரத்தையுடன்பரிபாலனம் பண்ணுகிற மிஸ். எப். ஸ்வேன்ஸன் அம்மையாரிடம் சென்று அநுமதிகேட்டனர். அவ்வம்மையாரும் அகமகிழ்ந்து முகமலர்ச்சியுடனே தாமே நேரில் வந்து சகல விஷயங்களையும் காட்டுவதாக வெளிவந்தனர். எம் நண்பர் எங்களை உடனே உள்ளே அழைக்க நாங்களும் உட்சென்று அவ்வம்மையாருக்கு வந்தனமளித்துச் சிறிது சம்பாஷித்துக்கொண்டிருந்தோம். பின்னர் அவ்வம்மையார் எங்களைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்று ஒவ்வோர் வகுப்பாய் அவ்வாயில்லாப் பூச்சிகளுக்குக் கற்பிக்கும் முறையைக் கைவிரல்களாலும் முகக்குறிகளாலும் காட்டப்படும் அறிகுறிகளால் வினவி விளக்கிக்காட்டினர். நாங்கள் சென்றகாலத்தில் ஆண், பெண், உள்பட அப்பாடசாலையில் கற்பிக்கப்பட்டோர் ஏறக்குறைய 120 பேர்களுண்டு சென்றவருஷம் மார்ச்சுமீ 31உ 76 பிள்ளைகள் மட்டுமே இருந்தார்கள் என்பது வித்தியா இலாகாரிபோர்டால் தெரியவருகிறது. அதற்கு முன் வருஷத்தில் 65 பேர்களே இருந்தனர். சென்ற இரண்டு வருஷகாலத்தில் இப்பாடசாலை தொகையிலிரட்டித்திருப்பது நன்கு கவனிக்கத்தக்க விஷயம். அப்பாடசாலைப் பரிபாலகரரான மிஸ். எப். ஸ்வேன்ஸன் அம்மையார் அவர்களுடைய மேற்பார்வையில் மாணாக்கர் இரட்டித்தது ஒரு வியப்பாகமாட்டாது. தாயும் குழந்தையினிடம் அத்துணைகருணையோடுகூட இராளெனின் அவ்வம்மையாரின் அன்பை எவ்வாறு பாராட்டுவோம்.

அப்பாடசாலையில் பாலர் வகுப்புத் தொடங்கி ஐந்தாவது வகுப்பு (V Form) ஈறாக ஆறு வகுப்புக்களிருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் இருபாலாரும் கற்பிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு வகுப்பிற்கும் இரண்டு உபாத்தியாயர்களிருக்கிறார்கள். ஒருவர் தமிழ் கற்பிக்கவும் மற்றொருவர் ஆங்கிலம் கற்பிக்கவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டுப் பிள்ளைகளுக்குத் தமிழும் இதர நாட்டுப்பிள்ளைகளுக்கு ஆங்கிலமும் கற்பிக்கிறார்கள்.

ஆங்குக் கற்பிக்கும் உபாத்தியாயர்களில் பலரும் சுதேச கிறிஸ்

தவர்களே. சிலபேர் ஐரோப்பிய மாதுகள். எல்லோரும் மிஸ். எப்ஸ்வேன்ஸன் அம்மையாரைப்போலவே யாதொரு வேதனமும் பெற்றுக்கொள்ளாமல் ஊக்கத்துடன் உழைத்து வருகின்றனர். இஃதன்றோ வித்தியாதானம் இஃதன்றோ ஆரியரின் கல்விமுறை இதனினும் புண்ணியம் வேறுளதோ. அப்பாடசாலை ஒரு ரிஷி ஆச்சிரமம் போலவே காணப்படும். ஜன நெருக்கமில்லாத ஏகாந்தமான இடத்தில் இம்மாண்பானதொழிலில் வருந்திஉழைத்து புண்ணியத்தைக் கொள்ளைகட்டும் அவ்வம்மையாரையும் நகமும் தசையும்போல் வாழ்ந்து அவருடன் ஒற்றுமைப்பட்டுழைக்கும் அப்போதகர்களையும் நேரில் பார்க்கவே எமக்குச் சிறிது பொறாமையுமுண்டாயிற்று.

அப்பாடசாலைக்கு வங்காளம் அலகபாத் முதலிய தூரதேசங்களினின்றும் அநேகர் வந்து கற்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உண்டியும் உடையும் உதவி அவ்வம்மையார் தாயிலும் பன் மடங்கு அன்புடன் போற்றிவருகிற காட்சியைக் காணாத கண்ணென்ன கண்ணே.

ஏனைப்பாடசாலை மாணாக்கரினும் விரைவாகவும் சாதுரியமாகவும் அப்பாடசாலை மாணாக்கர் விடை பகர்ந்தனர். எழுத்தும் கண்ணில் ஒற்றிக்கொள்ளும்படியாகவே மணிமணியாய் அழகாயிருந்தது. மனக்கணக்கினை வெகு தீவிரமாகச் செய்தனர். ஊமையர்களிற் பலர் பேசப் பழக்கப்படுகின்றனர். சிலர் ஊறி ஊறிப்புத்தகங்களை வாசிக்கவும் செய்தனர். அவர்கள் வாசிக்கும் சப்தம் பூரணமாயில்லாவிடினும் நாங்கள் அறியத்தக்கவிதமாகவே இருந்தது. அவ்வம்மையாரைக்கண்டவுடன் மாணாக்கர் சந்தோஷக் கூச்சலிட்டுப் பேசமுயல்வதைக் கண்ணுற்ற எங்களுக்கே பேரானந்தத்தை விளைவித்த பொழுது இம்மக்களைப் பெற்றவர்களுக்குளத்துணை ஆனந்தமாயிராது. ஜாதிவருணாச்சிரம முறை தவறாமல் மாணாக்கர் போஷிக்கப்பட்டு வருகின்றனர் ஒரு பிராமணப் பையன் தஞ்சையினின்றும் வந்து படிக்கின்றான். அவனுக்குச் சாப்பாட்டுக்காக அவ்வம்மையார் பிராமணர் வீட்டில் ஏற்பாடு செய்திருப்பது அம்மாதரசியின் மனோவிசாலத்தைக்காட்டுகின்றது. நாட்டுக்கோட்டை செட்டிப்பையன் ஒருவன் உளறி உளறி இரண்டாம் வகுப்புப் புத்தகத்தைப் படிக்கக் கேட்க

ஆனந்தமாயிருக்கிறது. மூன்று யுரோஷிய மாணாக்கர் இவ்வாண்டில் சேர்ந்திருக்கின்றனர். திருநெல்வேலி மாகாணக் கூட்டத்தில் இம்மாணாக்கரிற் சிலரைக் கொணர்ந்து கற்பிக்கும் முறைகளை விளக்கினதாகக் கேள்வியுற்றுச் சந்தோஷிக்கிறோம்.

ஜீவகாருணியமேலீட்டினாலேயே இவ்வம்மையார் இப்புண்ய காரியத்தைச் செய்துவருகின்றனர். அமெரிக்கா தேசத்திற் பிறந்து வளர்ந்து நம் நாட்டுக்கென்று பாடுபட்டுழைத்துவரப்பட்ட இப்பெருமாட்டியின் வழியை நம்மனோர் சிலராவது பின்பற்றினால் நம் தேசம் க்ஷேமமடைய ஏதுவாகும் மத விஷயத்தால் தூண்டப்பட்டு இவ்வம்மையார் இப்புண்ணியம் செய்துவருகின்றனராயினும் ஜீவகாருணியமே அவ்வம்மையின் பேச்சிலும் ஒழுக்கத்திலும் குடிகொண்டிருக்கிறதாகப் புலப்பட்டது.

எழுதப்படிக்கவும் கணக்குப் பார்க்கவும் கற்பிப்பதுடன் 15 பேர்களுக்குமேல் கைத்தொழிலும் கற்பிக்கப்பட்டுவருகின்றதுடன் பாய்முடைதலும் தச்சுவேலையும் நடந்துவருகின்றன. கைத்தொழிற்சாலைக்கு இடம்போதாது. ஒரு சிறு அறையில் தற்காலம் இக்கைத்தொழில்கள் நடந்துவருகின்றன.

சுகத்தாழ்வு நேரிட்ட மாணாக்கரின் உபயோகத்துக்காக ஒரு சிறு வைத்தியசாலையும் படுக்கையறையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கும் இடம்போதாது.

இத்துணை செலவுகளையும் அவ்வம்மையார் அந்நியநாடுகளிலிருந்து வருகிற நன்கொடையாலும் சர்க்கார் திரவிய சகாயத்தாலும் நடத்திவருகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாபோர்டார் வருஷம் ரூ 200 நன்கொடையளித்து வருகிறார்கள்.

இம்மாதிரியானபாடசாலை இவ்விந்தியாவுக்கு ஒன்றுதான் எனத்தோற்றுகிறது.

இப்பாடசாலையைப்போன்ற ஒரு பாடசாலை பல ஜில்லாகளுக்கு மத்தியஸ்தானமாகிய திரிசிரபுரத்தில் இனி ஏற்படுத்துவது மிக நலமாகும். நம்மவர்களில் எம்மகானாவது இப்புண்யத்தைக் கைக்கொண்டால் பேரும் புகழும் உண்டாவதுடன் பெரும் புண்ணியமும்

கிடைக்கும். இப்பாடசாலைக்கும் நம்கனதனவான்கள் நன்கொடைய ளித்துக் கைகொடுப்பார்களாக. அன்னசத்திரம் போடுவதில் பேர் போன நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் இப்பாடசாலையையும் சிறி து கடைக்கண் பார்த்தால் பெரும் புண்ணியமடைவார்கள்.

மிஸ். எப். ஸ்வேன்ஸன் அம்மையாருடைய குணாதிசயங்களை யும் மனோ ஊக்கத்தையும் தெய்வ பக்தியையும் சாந்தத்தையும் கண் டோர் வியந்து உதவி செய்யாமலிரார். இப்பாடசாலை எவரும் கண்டு அதிசயித்து உதவி செய்யத்தக்கதான அபூர்வ இடம், பாத்திரமறி ந்து பிச்சையிடுதல் தான் சிறந்தது நம்முன்னோர்களுள் ஓர் ஊமைப்பெ ண்ணைப் பேசவைத்த ஸ்ரீ மாணிக்கவாசகருடைய சரிதத்தை நன்குண ர்ந்த நாம் பல ஊமைகளைப்பேசப் பயிற்றுவிக்கும் இப்பெருமாட்டியி ன் அருந்தொழிலை நன்குணராமற்போனால் நமக்கிழுக்கன்றோ ஆகை யால் இவ்வரிய பெரிய முயற்சிக்கு எல்லாரும் தம்மாலியலுதவி தாம் செய்வர் என்று நம்புகிறோம்.

இப்பாளையங்கோட்டையிலேயே குருடர்களுக்கு ஒரு பாடசா லை இருக்கின்றது. அதனைப்பற்றி மற்றோர் முறை எழுதுவோம்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

புருஷார்த்தம்.

அது அறம், பொருள், இன்பம், வீடு (தர்மம், அர்த்தம், காமி யம், மோக்ஷம்) என்ற நான்கு பகுப்புடன் மக்களுக்குரியது. மாந்தர் க்கிதனின் மிக்க பேறு வேறில்லை.

I. அறம்.

கர்மமாவது என்னவென்று நாம் பிரதமத்தில் விசாரிக்க வேண் டியது அத்தியாவசியம். அத்துடன் தர்ம (அற) மாவது என்ன வென்ற கேள்வியுந் தொடர்ந்தேவருகிறது. நான் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால், முதலில் என்னுடைய கடமை (தர்மம்) என்ன

வென்றும் நான் அக்காரியததைச் செய்யக் கூடுமோவென்றும் தெரிந்துகொள்ளவேண்டியது. தர்மத்தின் கருத்தோ ஒவ்வொரு மதஸ்தரிடத்தும் ஒவ்வொரு ஜாதியாரிடத்தும் வெவ்வேறு விதமாய் விளங்குகிறது. மகமதியன், கொரான் புஸ்தகத்திற் சொல்லப்பட்டவைகளையே தன் தர்மமென்றும், கிறிஸ்தவன், பைபிலில் பகர்ந்திருப்பவைகளே தன் தர்மமேமென்றும், இந்துக்கள் வேதங்களின் விளம்பப்பட்டிருப்பவைகளே தங்கள் தர்மமென்றும் இதே மாதிரியாக ஒவ்வொரு மதஸ்தரும் ஜாதியாரும் சொல்லவாரம்பிக்கிறார்கள். ஆகையால், காலதேச பேதங்களினால் அறமும் பேதப்படவேண்டியதென்பது நமக்கு வெள்ளிடைமலைபோல விளங்குகிறது. தர்மம் என்னும் பதத்தை மற்றப்பதங்களைப்போல அருத்தம் பண்ணுவது அசாத்தியமாயினும் அதையுபயோகித்துவரும் விதத்தினாலும் அதிலிருந்துண்டாகுங் காரணகாரிய நிகழ்ச்சியினாலுமட்டுமே அதன் தன்மையை யூகித்தறியலாம். செய்காரியந்தவிர்காரியங்களை முன்னிட்டு அது இத்தகையதென்றறிதல் கூடுமேயன்றி வேறொரு விதத்தாலுங் கூடாதென்பது தீர்ந்த விஷயம். நம்மைத்தைவிக (மேல்) நிலைக்கு உயர்த்துங்கர்மம் நல்வினையெனக் கூறப்படும். அது நம்முடைய தர்மம். அசுர (கீழ்) நிலைக்கு இழுக்கும் கன்மம் தீவினையாகும். அது நம்முடைய தர்மமன்று. எல்லாக்காலத்தும், எல்லாத்தேசத்தும், எல்லாச்சாதியார்க்கும் பொதுவாய் நிகழுங் கருத்தொன்றுளது. அது “அஹிம்ஸாபரமோதர்மம்” என்பதே எவருடைய உள்ளமும் நோகாதிருக்கும்படியான கர்மங்களைச் செய்தலே மேலான தர்மம் என்பது அதன் பொருள்.

நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது நாம் எப்போதும் பிறருடைய தர்மங்களை அவர்கள் மூலமே நிதானிக்கவேண்டுமேயல்லது நம்மோடொப்பிட்டுத் தெரிதல் பொருந்தாது ; அல்லது ஒரு ஜாதியார், ஒரு வகுப்பினருடைய வழக்கம் அனுஷ்டானங்களை மற்றோர் ஜாதியார் வகுப்பினருடைய வழக்கம் அனுஷ்டானங்களோடு ஒப்பிடல் எப்போதும் கூடாத காரியமே. நாம்உலகத்துக்கு ஒருபரிமாணம் அல்லேம். நாம்உலகத்தோடொட்டவொழுகவேண்டுமே யல்லது உலகம் நம்மோடல்ல “உலகத்தோடொ

ட்டவொழுகல் பலகற்றும், கல்லாரறிவிலாதார்." (குறள். XIV 10)
இது நாம் முக்கியமாய்க் கருத்தோடு படிக்கவேண்டிய மூதப்பாடம். நம்முடைய தர்மங்களை ஊழ்வினைகள் மாற்றிவிடுகின்றன வென்று கண்டு ஒரு தர்மத்தை மிகச் சிலாக்கியமான வழியிற் செய்தால்; சில சமயம் நம்மதேயாகும் அத்தர்மமும் சர்வ சிலாக்கியமானதாக முடிகின்றது.

ஒரு பால சந்நியாசி ஆரண்யஞ்சென்று நெடுநாள் அருந்தபசு செய்து கொண்டிருந்தான். பனிரெண்டு வருஷங்களுக்குப்பிறகு தன் அப்பியாசமுடிந்து சித்திபெற்றுவிட்டதாக நினைத்துத் தபஸை விட்டு இறங்கி வரும் வழியில் ஒரு மரத்தடியில் சிரம பரிகாரம் பண்ணிக்கொண்டிருக்கையில் மரத்திலிருந்து சில பழுப்பிலைகள் தலையின்மீது விழுந்தன. ஏறிட்டுப்பார்த்தான் ஒரு கொக்கும் ஒரு காக்கையும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டிருந்தன. அதைக் கண்ணுற்ற யோகியாருக்குக் கடுங்கோபம் வந்து, "என்ன? நம் தலையின்மீது இலையையுதிர்த்துவிட அவ்வளவு தைரியமா ?" என்று பார்த்தவுடனே அவருடைய யோகசக்திப் பிரபாவத்தினால் பஸ்மீகரமாயெரிந்து கீழேவிழுந்தன. அவருக்குண்டான ஸந்தோஷத்துக்கு அளவில்லை! ஆநந்தக் கடலிலேயே மூழ்கிவிட்டார், கொஞ்ச நாள் கழிந்த பின்னர் அந்தச் சந்நியாசி பிக்ஷையின்பொருட்டு ஒரு பட்டணத்துக்குச் சென்று ஒரு வீட்டின் வாசலில் நின்றுகொண்டு "தாயே, பிக்ஷைகொடுங்கள்" என்று கேட்டார். உடனே "ஐயா, சற்றே பொறுங்கள்" என்ற சப்தம் வீட்டுக்குள்ளிருந்து வந்தது. அதிலிருந்து அவர் "சீ துஷ்டை ! நம்மைக் காத்திருக்கும்படி செய்தாயே, நம்முடைய சக்திகளை நீயறியாய்போலும்" என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டிருந்தார்: "ஐயா, உம்மைப்பற்றியதிகமாகப் புகழ்ந்து கொள்ளாதேயும், இங்கு கொக்காவது காக்கையாவதில்லை என்று மறுபடியுமோர் சப்தம் கேட்டது. அவருக்கு வியப்புண்டாகிச்சிறிது நேரம் காத்துக்கொண்டிருந்தார். கடைசியாக ஒரு ஸ்திரீ யுள்ளேயிருந்து வந்தனள். அவர் அவளுடைய காலில்விழுந்து நமஸ்காரம்பண்ணி "தாயே" அது உனக்கு எப்படித்தெரியும்" என்று கேட்டார். ";ஐயா உங்களுடைய யோகமுதலிய அப்பியாசங்கள்

என்னிடமில்லை. நான் சாதாரண ஏழை மனுஷி! ஆனால் என்னுடைய பர்த்தா வியாதியஸ்தராயிருக்கிறார். அவருக்குப் பத்தியங்கொடுத்து உபசரித்துக்கொண்டிருந்தேன். அது என்னுடைய தர்மம் (கடமை) என்னுயுசு பரியந்தம் என்னுடைய தர்மத்தைச் செய்யக்கட்டுப்பட்டிருக்கிறேன். நான் சிறுமியாய்க் கல்யாணமில்லாதிருந்தபோதும் என்னுடைய தர்மத்தைச் செய்தேன். இப்போது மனைக்கிழத்தியாய் என்னுடைய தர்மத்தைச் செய்கிறேன். இதுதான் நான் செய்யும்யோகாப்பியாசம். என்னுடைய ஸ்வதர்மத்தைச் செய்ததினால் நான் அருட் பிரகாசமடைந்திருக்கிறேன். அதினால் உம்முடைய எண்ணங்களையும் நீர்வனத்திற் செய்தவைகளையும் நான் அறிந்துகொண்டேன். ஆனால் இன்னும் விசேஷமாக நீர் ஏதேனும் தெரிந்துகொள்ள விரும்பினால், இன்னநகரத்துக் கடை வீதியில் கசாப்புக் கடை வியாபாரஞ்செய்யும் இன்னானிடம்போய்க் கேட்டால் நீர் சந்தோஷிக்கும்படியாக அவன் வேண்டியமட்டுந் தெரிவிப்பான்" என்று சொன்னாள். "அந்தப் பட்டணத்துக்காவது கசாப்புக்கடைக்காரனிடமாவது நானெங்கேபோகிறது" என்று யோகிக்கு ஒரு எண்ணம் ஜனித்தது. ஆனால் நிகழ்ந்த சங்கதியைக் கண்ட அளவில் அவருடைய மனஞ்சிறிது தெளிவடைந்தது ஆதலால், அவர் வழியே நடந்தார். நகரத்துக்கருகே வந்து கசாப்புக் கடையுங்கண்டார். அங்கேஒரு கொழுத்த தடியன் சிறிது தூரத்திலிருந்துகொண்டு ஆடுகளைக் கொல்வதிலும், கறியை நறுக்கிப் பலருக்கு விற்பதிலும், பணம்வாங்குவதிலும் வெகு மும்முரமாயிருந்தான். பார்த்தார் சந்நியாசி "ஆண்டவனே துணை. இவனிடத்திலிருந்து தானா நான் ஞானோபதேசம் பெறப்போகிறேன்? அவன் யாராயிருப்பினும்சரி. தற்சமயம் வேதாளம்போல் விளங்குகின்றானே" என்று நினைத்துக்கொண்டு நின்றான். உடனே அவன் திரும்பிப்பார்த்து "ஸ்வாமி அம்மாது இங்கனுப்பினாளோ? என் வேலை தீரும்வரை அப்படியுட்கார்ந்திருங்கள்" என்று சொன்னான். "இன்னுமிங்கிருந்து என்னவரப்போகிறது பார்ப்போம் என்றுட்கார்ந்துகொண்டிருந்தார். வியாதன் வேலை விமரிசையாய் நடந்தது. அவனுடைய வேலைகளெல்லாம் முடிந்தவுடனே திட்டம்பார்த்துப் பணத்தையு மெடுத்துக்கொண்டு" வாருங்கள், சுவாமி வீட்டுக்குப்போவோமென்று சொல்லிப் புறப்பட்டான்.

அவர்களிருவரும் வீடுவந்து சேர்ந்தனர். வியாதன் ஒரு ஆசனம்போட்டு அதிற் சற்றுட்கார்ந்து கொண்டிரும் என்றுள்ளே போயினன். அங்கே போஜனமருந்தச் செய்து அவர்கள் திருப்திபட்டில் வேண்டியன வெல்லாஞ்செய்துவிட்டு வெளியேவந்து சந்நியாசிக்கெதிரே யுட்கார்ந்துகொண்டு "சுவாமி, இப்போது என்னைப்பார்க்க வந்தீர்கள்போலும்; என்னாலாகவேண்டுவதேதேனுமுண்டோ? புகன்மின்" என்று கேட்டான். பிறகு அந்தயோகி ஆன்மார்த்தமான பல கேள்விகளைக் கேட்டலும், வியாதன் தத்துவார்த்த உபதேச மொழிகளை வெகு கெம்பீரமாகவும், தாஷ்டீகமாகவும், பிரசங்கித்தான். அப்பிரசங்கத்துக்கு வியாதகீதை என்று பேர். அதில் வேதாந்த ரஹஸ்யங்கள் அநேகமாய் அடங்கியிருக்கின்றன. வேதாந்த சாஸ்திர விசாரதர்கள் "பகவத்கீதா" சிரவணத்துக்குப்பிறகு இந்த வியாதகீதை விசாரிக்கத்தக்கது. வியாதன் பிரசங்கம் முடிந்தவுடனே, சந்நியாசிக்கு ஆச்சரியமுண்டாகி, நீ இவ்வளவு ஞானசஹிதனாய் ஏன் இந்தச் சரீரத்தோடிருக்கின்றனை? மஹாஆபாசமான இந்தச்சண்டாளத் தொழிலை ஏன் செய்கின்றனை?" என்று கேட்டார் "சுவாமி, ஒரு தர்மமும் ஆபாசமல்ல. ஒரு தர்மமும் அசுத்தமல்ல. என்னுடைய ஜன்மமும் கன்மமும் அப்படிக்கிருந்தன. என் சிறு பிராயத்தில் அத்தொழிலிற் பழகினேன். எனக்கோ இச்சையில்லை என்னுடைய ஸ்வதர்மத்தை நான் நன்றாய்ச் செய்கிறேன். நான் இல்லறத்துக்குரிய கன்மங்களைச் செய்கிறேன். என் பிதா மாதா மகிழும்படிக்கான கர்மங்களையுஞ் செய்துகொண்டிருக்கிறேன். எனக்கு உம்முடைய யோகாப்பியாசம் ஒன்றுந் தெரியாது. அல்லது நான் துறவியுமல்லன். நான் நாட்டைவிட்டு வனம்போகவில்லை. ஆனால் எனக்கேற்பட்ட தொழில்களை என்ஸ்வதர்மமாக எண்ணிச் செய்தமையால் இத்தகைய ஞானசித்தி எனக்கு வாய்த்தது" என்று சண்டாளன் சொன்னான்.

நம்முடைய ஜன்மத்தினாலேற்பட்ட தர்மங்களை நாம் செய்தே தீரவேண்டும். அப்பால் அது முற்றுப்பெற்றமேல் நம்முடைய நிலைமைக்குத்தக்க கர்மங்களைச் செய்யவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் ஜீவதிசையில் ஏதாவது ஒரு நிலை[illegible]யிலிருக்கும்படி யமைந்திருப்பதினால், முதலில் அந்த நிலைமைக்குத் தக்க தர்மத்தைச் செய்ய

வேண்டும். தன்னைக்கவனியாத ஒரு பெருங்குற்றம் மனிதசுபாவத்தில் அமைந்து கிடக்கிறது. ஸிம்மாசனாதிபதியாயிருந்து அரசு புரியலாமென்று மனிதன் நினைக்கிறான். அப்படிக்கிருந்தபோதிலும் அதற்கேற்பட்ட தர்மம் செய்யப்பட்டதாவென்று முதலில் தெரிந்துகொண்டு அதைமுற்றுப்பெறச்செய்வனேல், அப்பால் மேற்பட்ட நிலைக்குள்ள தர்மம் தானேவரும்.

தற்சமயம் நம்முடைய கைவசத்திலுள்ள தர்மங்களைச் செய்வதினாலும், நாம் மேனிலையையடையுங்காலும் நம்மைத் தைரியப்படுத்தி மெல்ல மெல்ல உயர்தர கர்மங்களைச் செய்வதினாலும், மட்டுமே நாம் முன்னுக்கு வரும்படியான ஒரு ஸ்திதியை யடைகிறோம். தர்மத்தை யிகழ்தல் கூடாது. பெரிய தொழிலைச் செய்கிறவனைவிடச் சிறுவினைசெய்பவன் தாழ்ந்வனாகான். ஒரு மனிதனை யவன் தர்மங்களை முன்னிட்டு நிதானித்தலியலாது. அவன் அவைகளைச் செய்து முடிக்குந்திறத்தை நாடி நிதானிக்கப் பெறுகிறது. அவன் செய்யும் மாதிரியும் செய்ய உபயோகிக்கும் சக்தியுங்கொண்டே அவனைச் சோதனை பார்க்கலாம். பிரதிதினமும் முட்டாள் தனமாய் உளறிக்கொண்டுதிரியும் படிப்பாளியைக்காட்டிலும் அதிசீக்கிரத்தில் நேர்த்தியுங் கெட்டியுமான பாதரக்ஷைகளைத்தைத்துக் கொடுக்கும் சக்கிலியனானவன் தர்மாநுசாரமாக மேம்பட்டவனே.

தர்மத்தின் நோக்கமும் மாற்றப்படவேண்டுமென்றும் எங்கே புறத்தேயிருந்து அறப்பிரயோஜனத்தையு மெதிர்பார்க்கப்படாமலிருக்கிறதோ அந்த இடத்தில் மட்டுமே மஹாவிசேஷமான வேலைகளெல்லாஞ் செய்யப்படுமென்றும் நாம் நாளடைவில் தெரிந்துகொள்கிறோம். ஆயினும், தர்மநோக்கஞ் சிறிதுமில்லாத கன்மத்துக்கு நம்மை ஏவும் தர்மத்துவாரா வந்த வேலையே அது. எப்போது கர்மமானது உபாசனை அம்மட்டோ இன்னும் மேலாகக் கருதப்படுகிறதோ அப்போது தான் கர்மம் தர்மத்தின் பொருட்டாய் விளங்கும்.

ஒவ்வொரு மனிதனும் தன்னபிப் பிராயம்போல ஒவ்வொரு விஷயத்தையுஞ் செய்துமுடிக்கவேண்டியது. அதுதான் லகுமார்க்கம். பிறத்தியாரபிப் பிராய[illegible]போற் செய்வது கூடாத காரியம். ஒரு குழந்தையை உதாரணமாக [illegible]த்துக்கொள்வோம். அந்தக் குழந்

தையை இருபது மைல்தூரம் நடக்கும்படி செய்தால், அது அக்குழந்தைக்குச் சாத்தியப்படுமோ? செத்தேபோய்விடும். அல்லது ஆயிரத்திலொன்று குறிப்பிட்ட இடத்துக்கு இருபது மைல் தூரம் நகர்ந்துபோய்க் குற்றுயிராய்சசேரும். அதுதான் நாம் பொதுவாக உலகத்தோடொத்து நடக்க எத்தனித்தல். ஒவ்வொரு மதத்திலும் உள்ள புருஷர்கள் ஸ்திரீகள் மற்று யாரானுலும் ஒரு விஷயத்தையறிந்துகொள்ளவாவது ஒரு விஷயத்தைச் செய்யவாவது ஒரே மனசாகவும் ஒரே சக்தியுடையவர்களாகவும் அல்லது ஒரே சாமர்த்தியமுள்ளவர்களாகவும் இருத்தல் குதிரைக்கொம்பே. அவர்களுக்குத் தனித்தனி அபிப்பிராயங்கள் இருக்கலாம். நாம் ஒன்றையாவது குறை கூற அருகரல்லேம். ஒவ்வொருவனுந் தன் மனத்துக்கிசைந்தவண்ணம் எந்தக்காரியத்தையும் திருத்தமாய்ச் செய்துமுடிக்கட்டும். நான் பிறருடைய கோட்பாட்டின்படியாவது அல்லது பிறர் என் கோட்பாட்டின்படியாவது நடக்கத்தான் வேண்டுமென்பது நியாயமல்ல. பலாமரத்தை மாமரத்தோடும் மாமரத்தைப் பலாமரத்தோடும் ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வாற்றுனும் பொருந்தாத காரியமே. மாமரத்தோடு மாமரத்தையும் பலாமரத்தோடு பலாமரத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தல் பொருத்தமான விஷயம். அதுபோலவே நாமெல்லோருக்குந் தான்.

வேற்றுமையில் ஒற்றுமையே சிருஷ்டியின்சம்பிரதாயம். ஸ்திரீ புருஷர்களுக்குள் ஜீவபேதம் ஏற்பட்டாலும் கடைசியில் ஐக்கியம் உண்டு. ஸ்திரீ புருஷர்களின் பலவிதமான குணம் பிரிவினைகளனைத்தும் சிருஷ்டிக்கிரமத்தில் ஏற்பட்ட சுபாவவேற்றுமையே யொழிய வேறில்லை. ஆயினும் அவர்களை ஒரு ஒழுங்கில்வைத்து எண்ணவுங் கூடாது அல்லது அவர்களுக்கு ஒரே பாவனை ஸ்தாபிக்கவுங்கூடாது இவ்விதம் மாறிச்செய்தலே சுபாவ விரோதமான கலகங்களை விளைவிக்கும். அதின் பலனே பிரதி மனிதனையும் சுயத்துவேஷியாக்கி நன்னெறியிலும் சற்கருமத்திலும் நின்று விலக்கிவிடுகிறது. நம்முடைய தருமமானது அவருடைய தீர்க்கமான உயர்ந்த பாவனைகளின்படி கர்மங்களைச் செய்வதில் உற்சாகப்படுத்தி அந்தப் பாவனைகளின்படி அதிசீக்கிரத்தில் நற்பலனையடையச் செய்விப்பதுதான்.

நம்முடைய தருமசாஸ்திரங்களில் மனித வகுப்பில் பல வகுப்புகளும் உட்பிரிவுகளும் ஏற்பட்டிருக்கிறதுந் தவிர பொது விதியென்றுஞ் சிறப்பு விதியென்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பொது விதியாவது ஜாதி, மதம், வயசு, காலம், முதலிய பேதமில்லாமல் எல்லாரும் அத்தியர்வசியம் அநுஷ்டிக்கக்கூடிய சாமானிய தருமங்களாகும். சிறப்பு விதியாவது ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு மதத்துக்கும் காலத்துக்குந் தக்கபடி தனித்தனி அநுஷ்டிக்கவேண்டிய விசேஷ தர்மங்களாகும். ஒவ்வொருவரும் ஆணுயிருந்தாலும் பெண்ணுயிருந்தாலும் இன்னின்ன காலத்தில் இன்னின்ன சமயத்தில் இன்னின்னதுதான் செய்யவேண்டுமென்றும், அதினின்றும் வழுவினல் இன்னின்ன தோஷங்கள் சம்பவிக்குமென்றும், சமயோஜிதமாகச் சொல்லியிருப்பது நம்முடைய மதக்கிரந்தங்களிலல்லாமல் மற்ற எந்தத்தேசத்திலும் எந்த மதத்திலும் இல்லையென்பது தீர்ந்த விஷயம். ஒவ்வொரு நிலைமைக்கும் சக்திக்கேற்ப இன்னின்ன தர்மங்கள்தான் செய்யவேண்டுமென்று ஏற்பட்டிருப்பதால் அதை மாற்றி யநுஷ்டித்தல் இயலாது. ஆனல் ஒன்றுக்கொன்று உயர்ந்ததென்று சொல்லவுங்கூடாது. கிருகஸ்தன் நெறிபற்றி நிற்பானேல், அவன் சன்னியாசிக்குத்தாழ்ந்தவனல்லன். ஆனல்சன்னியாசியும்கிருகஸ்தனுக்குத் தாழ்ந்தவனல்லன். சிம்மாசனதிபதியாய் இராஜ்யபாரந்தாங்கி நிற்கும் சக்கரவர்த்திக்கு மலம்வாரும் தோட்டி தாழ்ந்தவனல்லன். அரசனிடத்திலிருந்து இராஜ்யாதிகார முதலிய சகல பௌஷங்களையும் நீக்கிவிட்டுத் தோட்டி வேலைபார்க்கச்சொன்னல் எப்படியிருக்கும்? அவ்வேலையைப் பார்ப்பானே? அவ்வேலை தெரியாமல் பேந்தப்பேந்த விழிக்கவே செய்வான். தோட்டியை அரசாளச் சொன்னல் அது அவனுக்குச் சாத்தியமாகுமா? அதிசீக்கிரத்தில் தற்கொலை புரிந்துகொள்ளவும் எண்ணுவானன்றே? இல்லற வாசியை வனவாசியாய்த் துறவு மார்க்கத்திற்கடுத்த கருமங்களைச் செய்துகொண்டு ஏகாந்தத்திலிருக்கும்படிசெய்தாலும், சர்வசங்கப்பரித்தியாகியாய்க்காடே கதியாயிருக்கும் சந்நியாசியைக் குடும்ப விவகாரங்களை வகித்துப் பார்க்கும்படி செய்தாலும் இரு திறத்தவர்க்கும் அவை முடியாத காரியங்களேயாகும்.

ஒவ்வொருவனும் தன் தன்னிலையில் மேலானவனே. ஒருவனுக்கொருவன் தாழ்ந்தவனல்லன். இல்லறம் பெரிதோ துறவறம் பெரிதோ என்ற கேள்விக்கு இங்கு விடையளிக்கப்படுகிறது.

ஒரு பட்டணத்தில் ஒரு அரசனிருந்தான். அவன் தன்னிடம் வரும் சந்நியாசிகளனைவரையும் இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ? என்று கேட்டுக்கொண்டே வருவது வழக்கம். இப்படி அநேகர் விசாரிக்கப்பட்டனர். சிலர் இல்லறம் பெரிதென்றும் பலர் துறவறம் பெரிதென்றும் பகர்வதாயினர். அவர்கள் தங்கள் தங்கள் கோட்பாடுகளைத் திருஷ்டாந்த பூர்வகமாக ருஜுப்பண்ண முடியாமைபற்றி இல்லற வாசிகளாகும்படி கட்டளையிடப்பட்டது. இப்படி நெடுநாள் நடந்தேறிவந்ததில் ஒருவரேனும் இல்லறமாவது துறவறமாவது பெரிதென்று ஸ்தாபித்தார்களில்லை. ஆனால் கடைசியாக ஒரு சந்நியாசி அங்கே வந்தான் அவனையும் அரசன் வழக்கம்போலக் கேட்டான். அதற்கு சந்நியாசி அரசனைப் பார்த்து ஒவ்வொருவனும் தன் தன் ஸ்தானத்தில் பெரியவன்தானென்று கூறினான். அரசனும் சந்தேகமுடையவனாய் ருஜுப்பண்ணும்படி கேட்டான். அதற்கு சந்நியாசி நல்லது ரூபீகரிக்கிறேனென்றான். ஆனால், "அரசனே, நீ என்னோடு வரவேண்டும். சில நாள் என் கூடவேயிருந்தால் நான் சொன்ன சங்கதியை நிதரிசனப்படுத்தக்கூடு" மென்று சொன்னான். அரசன் அதற்கிணங்கி சந்நியாசியைத் தொடர்ந்து தன் ராஜ்ய எல்லையையும் இன்னும் பல ராஜ்யமுங் கடந்து மற்றொரு ராஜ்யத்தில் வந்து சேர்ந்தான். அப்படிப் போய்க்கொண்டிருக்கும்போது அந்த இராஜதானி நகரத்துக்கு இருவரும் வந்தனர். அங்கே ஒரு பெரிய சடங்கு நடந்து கொண்டிருந்தது. பதினெண் வாத்தியங்களுடைய சப்தமும், கட்டியக்காரர்களுடைய எச்சரிக்கைச் சப்தமும், இன்னும் மற்ற ஆடல் பாடல்களின் ஒலியுங் கேட்டு இது வென்னவென்று விசாரித்த வளவில் சர்வாடம்பரத்தோடும் ரத கஜ துரக பதாதிகளோடும் பவனி யொன்று வரக்கண்டார்கள். அரசனும் சந்நியாசியும் என்ன நடக்கிறது பார்ப்போமென்று அங்கே நின்றார்கள். அத்தேசாதிபதியான அரசன் புத்திரி சுயம் வரம் நாடி யின்று ஊர்வலம் வருகிறாளென்று விசாரித்துத் தெரிந்துகொண்டார்கள்.

ராஜபுத்திரி ஸர்வாலங்கார பூஷிதையாய் ஒரு சிம்மாசனத்தில் வீற்றிருந்தாள். ஒவ்வொரு ராஜபுத்திரர்களும் பார்ப்போர் கண்களை மயக்கும்படியான மிக நேர்த்தியான ஆபரணங்களையும் ஆடைகளையுந்தரித்துக் கொண்டு வெகு இறுமாப்போடு வந்து கூடினார்கள். இவன் இன்ன தேசத்தரசன், இவன் இன்ன தேசத்தரசனென்று கூறப்பட்டனர். இராஜகுமாரத்தியோ, அந்தச் சபையைச் சுற்றி ஒவ்வொருவராகப்பார்த்து வந்ததில், ஒருவனாவது அவளுக்கு மனோரம்மியமாகக்காணப்படவில்லை. அங்கு விஜயமாயிருந்த ராஜபுத்திரர்களில் ஒருவராவது அவள் மனசுக்கு இணங்கியவராகத் தோற்றப்படாமையால் சிறிது மன வியாகூலத்தோடு இதற்குமுன் பல தடவைகளிலும் இப்படியே நிஷ்பிரயோஜனமாகி விட்டதென்று நினைத்து மறுபடியும் சிம்மாசனத்திலுட்காரத் திரும்பினாள். இதற்குமுன் இத்தகைய சிறப்பான கூட்டங்கூடவேயில்லை. அரச குமாரர்கள் வெகு கெம்பீரமாக அலங்காரம் பண்ணிக்கொண்டு வந்திருந்தபோதிலும் அவர்கள் விருப்பம் வீணாய் விட்டது. இப்படி யிருக்கும்போது கோடி சூரியப்பிரகாசத்தோடு காமனையழிக்கும்படியான திவ்ய சுந்தரரூபத்தோடு ஒரு பால சந்நியாசி அங்கே நடக்கும் வேடிக்கைகளைப் பார்க்கும்பொருட்டு ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தார். இராஜ குமாரத்தி வேஷம் போட்டுக்கொண்டுவந்திருந்த இராஜ குமாரர்களனைவரையும் பொம்மைகளாயிருக்கும்படி செய்துவிட்டுத் திரும்புகையில் கூட்டத்திற்குள் நின்றுகொண்டிருந்த சுந்தர பால சந்நியாசியின் ரூபம் அவள் கண்ணில்பட்டது. உடனே அவ்விடஞ்சென்று மாலையை அவர் கழுத்திற்போட்டாள். பால சந்நியாசியோ இதென்ன விந்தை? தகாத காரியத்தைச் செய்கிறாய், நானோ சந்நியாசி என்றுசொல்லி மாலையை அறுத்தெறிந்தான். மறுபடியும் வேறொரு மாலையைக் கழுத்திற்போட்டாள். அதையும் முன்போலவே அறுத்தெறிந்தான். இதைப்பார்த்துக்கொண்டிருந்த அத்தேசத்தரசன் எளியவனாயிருக்கிறதினால் நம்முடையகுமாரத்தியைமணந்துகொள்ளப்பயப்படுகிறானோவென்று தனக்குள்ளே நினைத்து அந்தப் பால சந்நியாசியிடம் வந்து "இப்போது என் புத்திரிக்கு ஸ்திரீதனமாகப் பாதி ராஜ்யத்தை இதோ கொடுக்கிறேன். என்னுடைய ஜீவாந்தத்தில் மற்றப் பாதி ராஜ்யமும் உமக்கேவரும்" என்று சொல்லலும் அந்த ராஜகுமாரத்தி வேறொரு

பெரிய புஷ்பஹாரத்தை அவர் கழுத்திற் போட்டாள். பாலசந்நியாசியோ கடுங்கோபங்கொண்டு மாலையைத் துணுக்குத் துணுக்காய் அறுத்தெறிந்து "இதென்ன முட்டாள்த்தனம். எனக்குக் கல்யாணமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே கூட்டத்தினின்றுந் தப்பித்தோடினார்.

இப்போது அந்த ராஜகுமாரத்தி அந்தப் பாலசந்நியாசியினிடத்து மிகு காதலாகி நான் இவரையே மணந்துகொள்வேன். தவறினால் நான் சாவேனென்று சொல்லிக்கொண்டு அவரை மறுபடியும் அழைத்துவரும்பொருட்டுப் பின்றொடர்ந்து சென்றாள். அப்பால் அரசன் கூடச்சென்ற நம்முடைய மற்ற சந்நியாசி "அரசனே இந்த ஜோடியைப் பின் பற்றுவோம் வா" வென்று சொல்லி அவர்கள் பின்னே சென்றார்கள். ஆயினும் தொடர்ந்து நடக்கமுடியாமல் கொஞ்சத் தூரம் பின் தாழ்ந்தே சென்றார்கள். அரசன் மகளை மணந்துகொள்ளமாட்டோமென்று சொன்ன பால சந்நியாசி அநேக மைல் தூரம் அந்நாட்டிடைச் சென்று பிறகு காட்டில் பிரவேசித்து அதனடர்ந்த ஒரு பாகத்தில் நுழைந்தார். இராஜகுமாரத்தியும் இதுவரை அவர் நிழல்போலப் பின் பற்றினாள். மற்ற இருவர்களும் அவர்கள் பின்னோடினர். அந்தப் பால சந்நியாசி வனசஞ்சாரியாயிருந்து காட்டினுட்பிரவேசித்துச் செல்வழியெல்லாம் செவ்வனே தெரிந்தவராதலால், இப்போது ஒரு சிறுவழியிற்றாவி மறைந்தனர். ராஜகன்னிகையோ அவரைக் காணக்கூடாதவளானாள். நெடுநேரம் அவரைத் தேடிப்பார்த்துங் காணாமையால் கடைசியாகவே ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு மறுபடியுங் காட்டைவிட்டுவெளியேற வழியுந்தெரியவில்லையே என்று அழுதுகொண்டிருந்தாள். நம்முடைய அரசனும் சந்நியாசியும் அந்நேரம் அங்கேவந்து. அரசன் புத்திரியைப் பார்த்து, "அம்மணி, அழாதே, இந்த வனத்தைவிட்டு வெளியேறும் வழியை யுனக்குக் காட்டுகிறோம். ஆனால் இப்போது அந்தகாரமோ சூழ்ந்துகொண்டது வழியுந்தெரியவில்லை இதோ ஒரு பெரிய மரமிருக்கிறது. இராத்திரி அதன் கீழ்த் தங்கியிருந்து விடிந்தவுடனே வெளியேறி உன் நகரத்துக்குச் செல்லும்வழியுங்காட்டுகிறோ" மென்று சொன்னார்கள்.

அந்த மரத்தில் ஒரு கூண்டில் ஒரு சிறு பக்ஷியும் அதின்பேடும் மூன்று சிறு குஞ்சுகளும் இருந்தன. இந்தச் சிறுபக்ஷி கீழேபார்த்து மரத்தடியில் மூவரையுங் கண்டு பேட்டைநோக்கி "ஹே பிரியை, நாமென்செய்வோம். இங்கே நம்முடைய கிருகத்தில் சில அதிதிகள் வந்திருக்கிறார்கள் மாரிகாலமாயிருக்கிறது. நம்மிடத்திலோ நெருப்புமில்லை" யென்று சொன்னது. ஆனதுபற்றி அப்படிச் சொல்லிக்கொண்டே அது வெளியே பறந்துபோய் ஒரு சிறு கொள்ளிக்கட்டையை அலகில் கவ்விக்கொண்டுவந்து அதிதிகளுக்கு முன்பாகப் போட்டது. உடனே அவர்கள் சிறு சுள்ளிகளை யெடுத்து அதில் வைத்து நல்ல நெருப்புண்டாக்கிக் கொண்டார்கள். ஆனால் சிறு பக்ஷிக்குத் திருப்தியுண்டாகவில்லை. அது மறுபடியும் பெண் பறவையைப் பார்த்து "அன்பே, நாமென்செய்வோம் இந்த அதிதிகளுக்குச் சாப்பாட்டுக்குக் கொடுக்க நம்மிடத்திலொன்றுமில்லையே. அவர்கள் பசியாயிருக்கிறார்கள் நாமோ கிருகஸ்தர்கள். வீட்டுக்கு வந்தவர் யாராயிருந்தாலும் அவர்களைப் போஷிக்கவேண்டியது. நம்முடைய தர்மமல்லவா ? என்னாலியன்றதை நான் செய்கிறேன் என்னுடைய சரீரத்தை அவர்களுக்கு ஆகாரமாகக் கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே நெருப்பின் மத்தியில் விழுந்து இறந்தது. அதிதிகள் அது விழுந்ததைக் கண்டு அதை இரக்ஷிக்க முயன்றதிலும் அது முந்திவிட்டபடியால், அது கருகிப்போகநேர்ந்தது அந்தச் சிறு பக்ஷியின் பேடானது தன்னுடைய நாயகன் செய்ததைக் கண்டு இங்கே மூன்று பேரிருக்கிறார்கள். அவர்கள் ஆகாரத்துக்கு ஒரே ஒரு சிறு பக்ஷிதானிருக்கிறது. அது போதாது என்னுடைய பர்த்தாவின் முயற்சி வீண் போகாது காப்பாற்றவேண்டியது பத்தினியாகிய என் தர்மம். என்னுடைய உடலும் அவர்களுக்கு ஆகாரமாகட்டும்'' என்று சொல்லிக்கொண்டே நெருப்பில்விழுந்து பொசிங்கிப்போனது. அப்பால் மூன்று குஞ்சுகளும் நடந்ததெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தன. அதிதி மூவருக்கும் ஆகாரம் காணாது நம்முடைய பெற்றோர்கள் அவர்களால் முடிந்த உபகாரஞ்செய்தும் இன்னும் அரைகுறையாயிருக்கிறது. நம்முடைய பெற்றோர்கள் செய்த காரியத்தைச் சம்பூரணமாக்க வேண்டியது நம்முடைய் தர்மம். நம்முடைய உடல்களும் அதே கெதியடையட்டும்" என்று சொல்லிக்கொண்டு மூன்று குஞ்சுகளும்

ஒரே மொத்தமாய் நெருப்பில் விழுந்து ஆவியிழந்தன. அம்மூவரும் பக்ஷிகளின் மாமிசத்தைச் சாப்பிடவில்லை. அவர்கள் கண்ட விஷயத்தில் வியப்புற்றார்கள். ஆகாரமில்லாமல் எப்படியோ அந்த இரவைக் கழித்தார்கள். விடிந்தவுடனே அரசனும் துறவியும் அரசன் மகளுக்கு வழி காட்டினார்கள். அவளும் சிந்தை நொந்து வந்த வழியே திரும்பினாள். பிறகு சன்னியாசி அரசனைப்பார்த்து "வேந்தே, அவனவன் ஸ்தானத்தில் அவனவன் பெரியவனென்று பார்த்தனையா, நீ உலகத்தில் வசிக்க விரும்பினால் பரோபகாரார்த்தம் கணமுந்தாழ்க்காது உயிரையுங்கொடுக்க ஒருப்பட்ட அந்தப் பட்சிகளைப்போல வாழவேண்டும். உலகைத் துறந்து ஒருவனுயிருக்க எண்ணினால் ரதியைப்பழித்து ஸர்வாங்க சுந்தரியாய் விளங்கிய அந்தத்தையலையும் அளகைபோன்ற அந்நகரத்தையும் திரணத்தினும் கடையா யெண்ணி வெறுத்துச் சென்ற பால சந்நியாசியைப் போலிருக்கவேண்டும். நீ குடும்பியாயிருக்க வெண்ணினால் பிறர் நன்மையின் பொருட்டு உன் ஜீவனையுங் கொடுக்கப் பின்வாங்காதே. துறவை விரும்பினால் அந்தம், அர்த்தம் அதிகாரமுதல் யாதொன்றையும் அகத்துக் கொள்ளாதே. ஒவ்வொருவனும் தன் ஸ்தானத்தில் பெரியவனே. ஆனால் ஒருவனுடைய தர்மம் மற்றொருவனுடைய தர்மமாகமாட்டாது" என்று சவிஸ்தாரமாகப் புகன்றனன்.

சாட்டையிற் பம்பர சாலம்போ லெல்லாம்
ஆட்டுவா னிறை யெனவறிந்து நெஞ்சமே
தேட்ட மொன் றறவருட் செயலினிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டுமேன்மையே"—ஸ்ரீ தாயுமானவர்.

பு. நா. சொக்கலிங்கம்.

குமரன் துணை.

* சந்நியாசி.

காப்பு.

மெய்யறிவு படைத்தவர்க்கு மலைவிளக்கின் எவ்விடத்தும்விளங்கித் தோன்
பொய்யறிவுக் கெவ்விடத்து மிலதாகி யிருவினையும் புரிதற் கேற்ப [றிப்
ஐயமிலா தின்பதுன்ப மளித்துலகை நிலைநிறுத்தி ஆளுந் தேவன்
செய்யபத தாமரையெம் சிந்தையெனுந் தடத்தலரச் செய்து வாழ்வாம்.

நூல்.

†நரைவரு மென்றென் கவிப்படி இளமை நாளில்இல் வாழ்வு ‡அதுவாக
விரைவின்மெய் யறிவால் நீத்தவன் ஒருவன் வேறுமா னிடர்வசிப் பின்றி
வரையடுத் துறுமோர் வனத்திடை மருவி வழங்குதேம் கனிகளும் காயும்
தரையிடைக் கிழங்கும் அருந்துபு நெடுநாள் தபசுசெய் திருந்தனன் மாதோ.

பாலனிற் றுறந்த பண்பினால் உலகப் பான்மைசற் றேனுமுட் பற்றான்
சீலமா இரவும் பகலுமெய்த் தேவன் திருவடி மலர்களைச் சிந்தை
ஏலவைத் தனையான் அநந்தகல் யாண இயற்குணங் களைப்புகழ்ந் தேத்திக்
கோலமாப்பாடித்துதிப்பதோர்வினை தான்கொண்டனன்ஆனதால்அவற்கு.

கடலுடை உடுத்த புவியெலாம் மேலாம் கருணையங் கடவிடத் தன்புத்
திடமுடை அடியார் சேரும் ஓர் சுவர்க்கச் செழும்பதம் எனவிளங் கியதால்
அடையும்நாள் பலஇவ் வாறுசெல் லுதலும் ஆங்கொரு பகல்அவன் உளத்தில்
தடைபடா தெழுந்த தையம்ஒன் றஃது தானெதேற் சாற்றுதம் தகவே. (3)

உலகில்அக் கிரமத் துடன்அநி யாயம் உறுவன. நன்மைசெவ் தவர்க்குப்
பலகொடுந் துன்பம் வருவன. மிகவும் பாதகம் இயற்றினோர் தமக்குக்
குலவிய இன்பம் பற்பல வந்து கூடுவ. என்னவே குறித்துப்
புலனுறப் பல்லோர் பலபல ஆகப் புகலுகின் றனரிதென் புதுமை.? (4)

---

* இது தற்காலம் கோயம்புத்தூர் ஜில்லா முன்ஸீப் வேலைபார்த்துவரும் மகா-ா-ா-ஸ்ரீ T. K. இராமகிருஷ்ணையர் B. A. அவர்களுடைய விருப்பத்தின்படி ஆங்கிலத்தின் தமிழ்மொழி பெயர்ப்பிற்கு இயையப்பாடப்பட்டது.

† "நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்........" என்னுங்கவி.

‡ அதுவாதல்—வாழ்வு இல்லையாதல்.

நீதியை நிறுத்தும் பரம தயாளா நிர்க்குணன் ஆளுகை தன்னில்
ஓதிரு வினையும் தத்தமக் குரிய தொருபலா பலந்தரல் ஒழிந்து
பேதமுற் றிடுமோ யாதுகா ரணத்தாற் பிறழ்ச்சிநே ரிட்டதென் றுள்ளம்
மீதுசந் தேகம் மேவிநாம் கேட்ட விஷயமீ துண்மையோ அன்றோ.! (5)

கண்ணினாற் கண்டு தெளிகுவா மென்று கடைப்பிடித் துறுங்குகை நீங்கி
மண்ணிடைப்போந்துவழியிடைக்காணமாட்டும்ஒவ்வொருவிஷயமுந்தான்
எண்ணிஆ ராய்ந்தே ஏகுவான் எதிரில் யௌவனம் எழிலுடை ஒருவன்
நண்ணினான் சந்யா சியையெதிர் நோக்கி நாதரே யாண்டையீர் என்றான். ()

நற்றவன் அதற்குவிடைகொடுத்தனையான் நண்ணும்ஊர்முதலகேட் டறிந்து
சற்றுநே ரஞ்செல் வழிநடப் பதற்குள் தனித்தனி ஒருவர்மேல் ஒருவர்
பற்றும்அன் பினராய் ஒருமனப் பட்டுப் பாரிடைப் பிரியமாட் டாராய்
ஒற்றுமை வளரப் புறத்திலும் கூடி உற்றனர் பயண்முள் உவப்பார். (7)

இருவரும் இவ்வா றொருவழிக் கொண்டே ஏகிஅந் நாளிராப் பொழுதில்
ஒருநக ரினிலோர் பெருந்தன வான்வீட் டுற்றனர் அகத்துளோன் நோக்கித்
திருமுகம் மலர்ந்து நல்லுப சாரம் செப்பிவீற் றிருந்திடச் செய்து
மருவறு சுவையும் அறுச்சுவை ஆக மன்னிய கறிஅமு தெல்லாம். (8)

மிக்குறும் பெருமை ஆகவே ஆற்றி மேவிய அதிதிகள் விருந்து
தக்கவா றியற்ற அன்றிரா அவணே தங்கிவை கறையிரு வோரும்
ஒக்கவே எழுந்து வழிநடப் புற்றார் உற்றுழித் தபசியோ டொருங்கு
புக்கவா லிபன்றான் தமக்கமு தளித்த புண்ணிய சாலியின் அகத்தில். (9)

உள்ளவோர் சொர்ண வள்ளமா னதையங் கொருவரும் அறிந்திடா வண்ணம்
கள்ளமாக் கரந்து கொணர்ந்தனன் இந்தக் கடுஞ்செயல் கண்டுசந் யாசி
உள்ளமேன் மிகவும் அதிசயம் மேவி உற்றவீ தென்னஆச் சரியம்
துள்ளிடா துண்ட வீட்டிலே கெண்டி அக்குவ தெனும்பழ மொழிதான். ()

இன்றிவண்சரியாய்நிகழ்ந்ததேஇன்னோன்இன்னணம்இயற்றுகிற்பவனோ
நன்றுநன் றம்மா நோக்கின் எவ்வளவு நல்லவ னாவிருக் கின்றான்
துன்றிய பத்தன் காரியம் முற்றும் சோதியென் றிருத்தலால் இன்னும்
கன்றிடா திவன்செய்கருமமுற்றிலுமேகருத்திடைக்கொண்நோம்காண்போம்

அதுவரை இவன்பால் எதுவும்பே சாமல் அமைவதே துணிபெனக் கருதிக்
கதுமெனத் தனது கருத்தினை வெளியிற் காட்டிடா தடக்கிமுன் போலப்
புதியனும் அவனோ டளவளாய்ப் பலவும் புகன்றொரு வழியிடைப் போனார்
இதுபொழு திரவி குடகடற் பாய எய்திய திருள்மருள் மாலை. (12)

குருமொழி ஞான பானுவால் மாயைக் கூரிருள் தொலைத்து மெய்யான
பொருள்வெளி மேவக் கண்டுளம் களித்த புண்ணியர் விதிவசத் தால்அத்
தெருள்மொழிமறந்துமுன் னுறும்இருளைச்சேர்ந்துளம்மயங்கல்போல்உலகம்
மருள்தர இரவி மறைதர விரவி வந்தது காரிருள் வானில். (13)

மண்ணிடத் துவரோ டுறும்தனை எடுத்து வானிடைப் புகழ்பெற வைத்த
கண்ணிடத் தொளியைக் காட்டும் ஆதித்தன் கைவிடுத் தகன்றமை கருத்தில்
எண்ணிடத் தியங்கி வாய்திறந் தொலித்தாங் கிடியிடித் தழுதகண் ணீர்போல்
நண்ணிடப் பெரிய மழைத்துளி சிதறி நளிர்கரு முகில்வளைந் ததுவே. (14)

வேறு.

தீராத சந்தேகச் சிந்தையோர் அகஇருளை
ஓரோர்கால் மெய்யுணர்ந்தோர் உரைவிலக்கி ஒளிதரல்போல்
பாராரும் பொருள்அறியாப் படிவளைந்த காரிருளைக்
காராரும் மின்னல்களால் கடிந்துவழி காட்டுறும். (15)

நீடிவரும் பேரிருளில் நேர்படுமோர் சிற்றூரில்
ஓடிஅடுத் திருவோரும் உற்றந்த ஊர்முகப்பில்
கூடமொடு சாவடியும் கொண்டதொரு பெரிதான
மாடமதைக் கண்டிரவில் வைகஇதே நல்லிடமாம். (16)

என்றுமனம் மீதுகளிப் பெய்தியே தலைவாசல்
நின்றுகத வினைத்தட்ட நெடுநேர வரைவீட்டார்
ஒன்றும்உரை யாதிருப்ப உள்ளொலியால் இவண்மனிதர்
துன்றிஉள்ளார் எனஅறிந்தார் தூமவன்னி நியாயமிதே. (17)

ஆதலினால் ஓயாமல் அடுத்தடுத்துக் கதவிடித்தார்
போதுமிகக் கழித்தவ்விற் பூமான்சற் றுளமிரங்கி
ஈதென்ன சனியனா இருக்கிறதென் றியம்பிமெள்ளப்
பாதிமனத் துடனேகபாடத்தின் அருகெய்தி. (18)

விரிவான மனத்தோடு மேவிவரு விருந்தினர்க்கா
ஒருநாளும் திறவாமல் உறுகதவக் காற்றிறந்து
வருவீருள் ளென்னஅரை மனத்தோடு புகலுதலும்
இருவோரும் உட்புகுந்தார் இருந்தனர்அங் கொருபாங்கர். (19)

இருந்தவரை யாரைநீர் எவ்விடமென் றுசாவிமனம்
பொருந்துமிகு கவலையுடன் புலர்ந்தசிறிது அடையினையும்
அருந்துவதற் கில்லாமல் அமையாத புனலினையும்
விருந்தினர்முன் கொணர்ந்துவைத்து மிசைந்திடுமின் இதனையென.()

நெஞ்சினுக்கு மேலாக நேர்ந்துவரு முகமனுணா
கொஞ்சம்உணாத்தான் அங்குக் கொடுத்தபோ சனம்இவர்க்குப்
பஞ்சம்அணா வயிற்றுக்கும் பற்றாதா யினும் அதையே
தஞ்சம்என அருந்திஒரு தனிஅறையிற் படுத்திருந்தார். (21)

அன்றிரவில் அகத்தலைவற் கடுத்திலது விழித்துயிற்சி
இன்றெனவே நாளையும்இங் கிவர்கள்இருந் திடுவாரோ
என்றபெருங் கவலையுடன் இனிஅவனைத் துரத்துவதற்
கொன்றிய உபாயம்எதென் றுண்ணினைந்து கிடந்தனனால் (22)

அக்கவலைக் கடற்கொர்புணை அடுத்தவன்போற் கடையாமம்
புக்கவுடன் எழுந்தவர்பாற் போய்எழுப்பி எழுமின்கள்
தொக்கஇருள் புலர்ந்ததின்னும் தூங்கலா மாதூக்கம்
தக்கபிர யாணிகட்குச் சத்துருஎன் றறியீரோ. (23)

அதிகாலையினிலிடம்விட் டகன்றாலன் றோவெதுப்பும்
கதிர்காணும் முனமோரூர் கண்டடைய லாமென்னப்
பதிவாகச் சொலித்துரிதப் படுத்தினான் சந்யாசி
மதியால் அவ்வகத்தலைவன் மனஅழுத்தந் தனைநோக்கி (24)

அதிசயித்திம் மடமையுண்டோ அளவற்ற செல்வமுளான்
நிதிபடைத்தும் லோபநிலை நிற்கின்றான் நிதிகொடுக்கும்
கதியெதுவோ எனப்பலவும் கருத்தெண்ணி, வெளியில்வரும்
ததியிலொரு விபரீதந் தனைக்கண்டான் அதைப் பகர்வாம். (25)

மாதவத்தோனுடன்போந்த வாலிபன் முன்னாட்டனக்குச்
சாதமிட்ட புண்ணியவான் றனிமனையிற் றிருடிவந்த
மேதகுபொற் பாத்திரத்தை மின்னுமழைக் காரிருட்டில்
வாதனையிற் றமையேற்ற மகாலோபி மாளிகையில். (26)

வைத்துவிட்டுப் புறப்பட்டான் மாமுனிவனிதையறிந்து
சித்தமிசைத் திகைப்பெய்திச் சேர்ந்திடுமுன் னாளிவன்றன்
உத்தமசற் குணத்தையுமின் னுரையையுங் கண் டுலகிலிவன்
மெத்தநல்லோ னெனக்கருதி மிக்கநட்புக் கோடலுற்றோம். (27)

அப்புறஞ் செய் திடுங்களவை அறிந்திவன்பொல் லாத்திருடன்
தப்பிதமாம் நன்றிகெட்ட தன்மையனென் றெண்ணலுற்றோம்
இப்பொழுதி லிவன்செயல்கள் எண்ணில்முன்பு நாம் நினைந்த
அப்படிப் பொல் லாதவனும் அயோக்கியனும் அலன் போலும். (28)

பித்தமெதோ பிடித்தவன்போற் பிசகான தன் செய்கைக்
கொத்தவழி ஒன்று மின்றி யுளம்போன் படியெல்லாம்
பத்திபத்தி யாய்ப்புரியப்பார்க்கின்றோ மென்றேதன்
சித்தமிசை யெண்ணி யொன்றுஞ் செப்பாம லவனோடு. (29)

பாட்டைநட்ந் திரவடுக்கப் பக்கநகர் மேவி நல்லோர்
கூட்டமுறிற் களிக்குமனக் கொள்கையனோர் குடித்தனத்தான்
வீட்டி லடைந்தன ரந்த வீட்டதிப னிருவரையும்
நாட்டமுறக் கண்டுதன் பால்நல்விருந்து போந்ததென்றே. (30)

வேறு.

அகத்தினொடு முகமலர இவர்க்கெதிரே போய்வணங்கி அழைத்து வந்து
மிகுத்தபல உபசாரம் புரிந்துபோ சனம்பண்ணு வித்தான் உள்ளம்
சுகத்துறநித் திரைஎய்தும் அளவும் மூவரும் கூடிச் சுகிர்தம் ஆன
மகத்துவசற் காரியங்கள் ஆராய்ந்து பலபேசி மகிழ்வோடுற்றார். (31)

நேரமிகச் சென்றதற்பின் நித்திரைக்குப் படுத்தனர்பால் நிசியின் அந்தச்
சீரமரும் தபசியொடு சேர்ந்தவா லிபன் எழுந்து திகழ் அவ் வீட்டில்
ஓரருமைச் சிறுகுழந்தை உறங்குதொட்டில் அருகின் மெள்ள உற்று மூச்சுப்
பேரவிடா வகைஅழுத்திக் கொன்றுவிட்டான் ஐயையோ பெரிதும் பாவம்.

இக்குழந்தை அந்தவீட் டதிபன்ற னுடையதவன் எண்ணில் காலம்
தக்கமகப் பேறின்றித் தவம் இயற்றிப் பெறுமகவச் சந்நியாசி
புக்கபல விஷயமுஞ்சிந் தித்திருந்த தாலுறக்கம் பொருந்தா துற்ற
மிக்ககொடுங் கொலைப்பழியைக் கண்டுமனம் நடுநடுங்கி வியர்த்து விம்மி. ( )

ஓவோவீ தென்கொடுமை என்புதுமை என்னதர்மம் உவப்பா நம்மை
நாவாரப் புசிப்பித்த வள்ளலுக்குப் பிரதிபல னாவீ தந்தோ
தேவா என் றுளங்கலங்கி நாக்குழறிப் புறம்போந்தித் தீயோன் நீங்கப்
போவாமென் றோட்டமுற்றான் கால்நடுக்கம் எடுக்கமெள்ளப் போகுங்காலை

அந்தவா லிபன்அவனைப் பின்தொடர்ந்து பிடித்தனனால் அவ்வூர் நீங்கி
முந்திஎகினர்சிறிது தூரம் எகலும் வழிகண் முன்னம் காணார்
வந்ததோர் கான்யாற்று வெள்ளமதைக் கடக்கஎண்ணி மயங்கி னார்கள்
இந்தவேலையில்அடுத்த வயலிலிருந் தொருவினைஞன் எதிரே வந்தான். (35)

வந்தவனிவ் விருவரையும் நோக்கியஞ்சா தீர்நானே வந்து நுங்கள்
சிந்தைமகிழ் தரஆற்றைக் கடத்திஓர் *ஆறுமக்குத் தெரிப்பேன் என்னா
முந்தியவ்வூ ராராறு கடக்கவைத்த பனைப்பாலம் முடுகி அன்னார்
நந்தல்இலா ததன்வழியே வரக்கூட்டி அக்கரையின் நண்ணும் எல்லை. (36)

---

* ஆறு—வழி.

வாலிபனித் தருணமே நல்லதென முன்னேகி மனம் மகிழ்ந்து
சாலிநிறை வயலிலிருந் துளமிரங்கித் தமக்குவழி தந்த நல்லோன்
காலில்அங்கு திடீரென்று தட்டிஅவன் கீழ்விழுந்து கடற்பெருக்கம்
போலவரும் பிரவாகத் திடைமூழ்கி உயிர்மாண்டு போகச் செய்தான். (37)

இன்னதொரு தீச்செயலைக் கண்டகண மேவாழ்க்கை எல்லாம் நீத்த
முன்னவன்கண் களிலிருந்து புனலோடத் தீப்பறக்க முகத்துக் கோப
சன்னதமுண் டாகஅடா பாதகா பழிகாரா சண்டாளா நீ
என்னகதி அடைவாயென் றுளம்புழுங்கி நாக்குழறி இசைக்கும்போதில். ()

வேறு.

வந்த வாலிபன் மானிடம் மாறியே
அந்த ரத்தில் அரும்பெருஞ் சோதியாய்
முந்து தேவன் முடுக்கிய தூதன்போல்
சுந்த ரத்தொடு தோன்றிநின் றானரோ. (39)

இந்த வோர்பெருஞ் சோதிமுன் எய்தலும்
அந்த ணாளன் அகங்குளிர்ந் தீதென்ன
விந்தை ஆம்என மெய்மறந் தேதொன்றும்
சிந்தி யாதொரு சித்திரம் போனின்றான். (40)

இன்னவேலையில் ஈசுரன் தூதன் அச்
சந்நியாசிமுன் சாற்றுவன் அன்பனே
உன்ன தின்சொல் ஒழுக்கம் செபம்எலாம்
மன்னு தேவன் மலர்ப்பதத் துற்றன. (41)

ஆதலாற் பரன் ஆக்கினை யின்படி
பூதலத் திடைப் போத நினாதகம்
மீதில் ஐயம் விலக்கிப்பின் மீளவே
போதல் உற்றனன் புண்ணிய கேட்டியால். (42)

துளக்கம் இல்பரஞ் சோதி செயல்எலாம்
விளக்கம் ஆகநீ மேவற்ப புத்தியால்
அளக்கல் ஆம்எனல் அற்பத்தின் அற்பமாம்
உளக் கருத்திலி துன்னுதல் விட்டொழி. (43)

போற்று வார்க்கருள் புண்ணிய னார்செயல்
சாற்று தேவர் தமக்கும் எட்டாதது
மாற்றில் வாக்கு மனோதீத மானது
சோற்று வாழ்க்கையர் சொல்லுந் தரத்ததோ. (44)

தடுப்பரும் பெருந் தன்மை யதாதலால்
விடுத்திலாது விளங்க உனக் கியாம்
எடுத்துக் கூறினும் என்பயன் முற்றிலும்
அடுத்துத் தேரவுன் னால் முடியாதரோ. (45)

ஆழம் ஆக அமிழ்த்தி முகக்கினும்
காழி ஒரிரு நாழிநன் னீர்கொளல்
எழ்கடற் புவி எங்கணும் இல்லெனச்
சூழ்மெய்ஞ் ஞானியர் சொற்றது காணுதி. (46)

அளவில் ஆம்உன் அறிவுக் கருவியால்
அளவிலாத அநந்தமெய்ஞ் ஞானந்தன்
அளவிடற் கரிதாகு மென்னுமல் நீ
அளவிடத் துணிந்தாய் இஃதாவதோ. (47)

இவ்வுண் மைப்பொருள் எண்ணிப் பரன்செயல்
எவ்வெவ் வாறுனதெண் ணிடைத்தோன் றினும்
அவ்வவ ற்றினுக் காகவுளத் திடை
ஒவ்விஐயம் உறுதற் கிடங் கொடேல் (48)

குலவும் ஆயிர கோடி அண்டங்களும்
பலவிதத்திற் படைத்தளித் தாளு வோன்
இலகுநீதி இறை யவனென் பதைச்
சிலை யெழுத்திலுன் சிந்தையிற் கோடியால். (49)

இறைவன் யாவும் இரட்சிக்கும் தன்மைதான்
குறைவி லாத குணத்தின தாயினும்
நிறையு மானிடர் நேர்முகமா யன்று
மறைமுகத்து வழங்கு மென் றெண்ணுதி. (50)

பண்டும் இன்றும் பராபர நாதனுர்
அண்டும் எத்தொழில் ஆற்றினும் அங்கங்குக்
கண்டஎது கருவி இரண் டையும்
கொண்டுதம் மனக்கோள் நடப்பிப் பரால் (51)

மானிடர்க்கு மறைந்திது நேர்தலால்
ஞானநாதர் தம் நற்சுகு ணங்களோ
டானமெய்ச் செயல் யாவும் அறிந்திடா
தினமாய் ஐயம் எய்துகின்றார்களே. (52)

இதுபெரும் பிழை இங்குக் கண்டசங்
கதிஇ வற்றிற் கனவிப ரீதமும்
அதி விகற்பமும் ஆனதிப் பூதலத்
தெது நடக்குமென் றெண்ணுதி யெண்ணுதி (53)

கண்ட வற்றின் கருத்துணர் வாயெனில்
மண்டலத்தை வகுத்துப் புரப்பவர்
கொண்ட நீதி குறித்துத் துதித்துவாய்
விண்டு போற்றுவை விள்ளுதுங் கேட்டியால் (54)

வேறு.

முதலாவ துனக்கு மிகும் உபசாரம் செய்து செல்வம் முழுதும் காட்ட
அதியான சம்பிரம மாவிருந்து செய்தானே அவன் புகழ்ச்சித்
துதிமீது வாஞ்சையுற்றோன் தன் சுகுணச்செயலை மற்றோர் தேன்றக் கண்டு
புதிதாமீ தெனவியக்க வேண்டுமென மனத்தாசை பொருந்தி வாழ்வோன்.

ஆதலினல் எதையும் அள வுக்குமிஞ்சிப் புரிந்து வந்தான் அஃதவன்றன்
மேதகுசற் குணங்களுக் கோர் வேர்ப்புழுவாயது வந்த விருந்தி னோர்க்குப்
போதுவிடிந் திடு முன்பு மாந்துதற்குத் திராட்சைரசம் பொற்கிண்ணத்தின்
மீதெடுத்துக் கொடுத்துவந்தான் இக்கொடிய செயலவனை விலகவேண்டி. ()

அக்கிண்ணந் தனையவனை விட்டகற்றி னேம்அனையான் அன்று தொட்டு
மிக்கபல வீணுடம் பரத்தின் மனம்வையாமல் மெய்யன்போடும்
புக்கவதி திகளை உபசரித் தவர்க்கு வேண்டுவன பொருத்தம் ஆகத்
தக்கபடி இயற்றுகின்றான் பொன் போகப் புத்திவந்து சார்ந்த தன்றே. (57)

இரண்டாவ துவந்தவி ருந்தினர்க்குவா சலைத்திறவா தெந்தநாளும்
முரண்டாகக் கதவடைத்துண் டொழுகுமிழி குணமுள்ள முழுலோபிக்கு
மருண்டாகத் தளர்ந்தவரு விருந்தினருக் குதவுபுண்யம் வழங்கும் நன்மை
திரண்டாண மற்பெருகி நலம் உதவும் என்பதனைத் தெரிக்கும் வண்ணம். ()

அங்குகரந் தெடுத்துவந்த பொற்கிண்ணந் தன்னைஅவன் அகத்தின்கண்ணே
தங்கவைத்து வந்தனன்அத் திவசமுதல் அவன் விருந்தாச் சார்ந்தோர் மாட்
பொங்குவிருப்புடன்தயையும்உடையவனுய்உள்ளுவகைபூப்பயார்க்கும் (டுப்
துங்க உபசார மெல்லாம் இயற்றுகின்றான் அறிந்தநலம் துறப்பார் யாரே. ()

மூன்றாவ தாகவியாம் கண்ட கிருகத்தன் நெறிமுறை விடாமல்
சான்றோனைப் பரமனடி மலர்களுக்கன் பியற்றிடுநற் றகையன் ஆனான்.
தேன்றானோ தீம்பாகோ தெள்ளமுதோ எனும்மழலைச் செவ்வாய் மைந்தர்
தோன்றாமை யாற்கவன்றான் பரன்அருளால் ஆண்மகவு தோன்றக் கொ
[ண்டான். (60)

அக்காலம் முதல்அவன் அவ் வருமந்த பிள்ளையின்மேல் அளவினுக்கு
மிக்கார்வம் பூண்டதனால் ஆண்டவன்பொன் அடிமறந்து மேதினிகண்
தொக்காரும் லெளகிக வியாபாரத் திடைமூழ்கத் தொடங்கும் பண்பால்
எக்காலும் கருணையாராம் எம்பெருமான் திருவுள்ளத் தெண்ணி அன்னான். ()

சீவரக்ஷைக் கொருகளையாய் இருந்தமக வினைத்தம்பாற் சேர்த்துக் கொள்ள
ஆவலுற்றார் மகவிறந்த அவ்வளவிற் றான்அறிவி லாமற் செய்த
பாவம் அறிந்தித்தண்டம் தருந்ததெனத் தன்மனத்திற் பற்றி மெய்யாம்
தேவன்அடி மலரின்மிசை விசுவாசம்அதிகம் உற்றுத் திகழ்கின்றானால். ()

கடையாக நீஅறிந்த காட்சியின் காரணம் எதுவேற் கான்யாற் றின்கண்
நடமின்என வழிகாட்டி னவன்உயிரோ டிருப்பின் இன்று நள்ளிராவில்
குடுகுடென முந்தினநாள் நாம்செல் கிருகத்தன்அகம் குறுகி அங்கண் [ன்.
உடையவர் யாரையும்கொன்று கொள்ளையடிப் பானெண்ணி உறுதிசெய்தா

ஆதலினால் அவற்றொலைத்து நீதிபனைக் குலத்தொடுகொத் ததுமனத்தின்
மீதிரக்கம் என்றறி. இவ் உட்பொருள்கா ணார்க்கிவைகள் விபரீ தந்தான்
நீதிஅறி வாநந்தம் உற்ற நின்மலனார் செயல் அனைத்தும் நிறைந்த அன்பும்
காதல்தரும் இரக்கமுநன் னீதியுமே எனமனத்திற் கடைப்பிடிப்பாய். (64)

அன்புமிகக் கோடிஇனி ஐயம்உறேல் எனச்சொலிமெய் அறிவைக்காட்டிப்
பின்புபரா தன் விண்ணின் மறைந்துசென்றான் சந்யாசப் பெரியோன் அப்
போ, தின்பமிகக் கொண்டிரண்டு விழியிலுமா நந்தவெள்ளம் எய்தக்கேட்டுத்
தன்பெரிய சந்தேகம் தவிரஇரு கரந்தலைமேற் சாரக்கூப்பி. (65)

அடியேனையாட்கொண்ட அரசேதெள்ளமிர்தேமெய் அறியேன் குற்றம்
கொடிதேனும் பொறுத்தருளென் ஐயமெல்லாம் தொலைந்ததுநீ கொள்ளும்
படிஆவதாகவெனத் துதித்தளவில் ஆநந்தம் பரவக் கொண்டு [சித்தப்
கெடிதாந்தன்ஆச்சிரமத் திடைப்புகுந்தான் தவத்தினுக்குநிகர்வேறுண்டோ.

முற்றிற்று.

எம். ஆர். கந்தசாமிக்கவிராயர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஐந்தாம் வருஷோற்சவம்.

வழக்கம்போலவே இவ்வருஷம் மேமீ 24உ மாலை 4-மணிக்கு மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் சபை கூடிற்று. சென்னை முதலிய பல ஊர்களிலிருந்து வந்த சங்கத்தின் அங்கத்தினரும் அபிமானிகளும் மதுரை வாசிகளுமாக சுமார் 500 பேர் வரை சேர்ந்தார்கள். முதலில் சிற்றுண்டியாதிய உட கொண்டு சபை ஆரம்பமானது. நம் இராசாங்கத்தாரால் நன்கு மதித்து மஹாமஹோபாத்தியாயப் பட்டம் அளிக்கப்பெற்றுத் தமிழ்க்குத்தாயுந் தந்தையும்ஒருருவெடுத்தாற்போன்றுவிளங்கும் ப்ரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார்கள்.

அறிக்கைப்பத்திரம் படித்து முடித்தபின் அதிற்கண்ட உசிதமானசில விஷயங்களை யெடுத்துச்சிலர்பேசினர். சங்கத்தார்செய்த பரீக்ஷையிற்றேறிய மாணாக்கர்கட்குப் பரிசளிக்கலாயிற்று. சபாநாயகரவர்கள் எழுந்து தமிழின் பெருமையையும், தாம் தமிழ் நூல்களைக் கற்றகாலத்தும் பின்னர் பல அரிய நூல்களை அச்சிடத்தொடங்கி பல நாடுகளில் அலைந்த காலத்தும் அடைந்த சிரமத்தையும் சந்தோஷத்தையும் மற்றும் பலவகைகளையும் பற்றிப் பேசியதுடன் இத்தமிழ்ச் சங்கத்துக்கு நம் தமிழ்நாட்டார் எல்லோரும் தங்கள் தங்களால் இயன்றவரை உதவிசெய்ய முற்படவேண்டுமென்பதைப் பற்றி வற்புறுத்திப்பேசினார்கள். அன்றியும் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் பேரால் இவ்வூரில் ஏதேனும் ஒரு தர்மம் நடைபெறுமாறு நம்மவர்கள் செய்யவேண்டுமென்றும் கூறினார்கள். இவர்கள் சங்க நூலாராய்ச்சியிற்றேர்ந்தவர்களாதலின் நச்சினார்க்கினியர் மீதுள்ள விசுவாசம் இங்ஙனம் வெளி வரலாயிற்று. இது கேட்டவுடன் சோழவந்தான் வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளையவர்கள் தாமும் நச்சினார்க்கினியர் திறத்தை நன்கு அறிந்தவராதலின் அங்ஙனம் செய்யக் கருதும் தருமத்துக்குத் தமது கையில் அணிந்திருந்த தங்கக் காப்பு ஒன்றை யளித்தனர். தமிழ்ச்சங்கத்துக்கு நன்கொடையாகப்பல்லோரால் அப்போதுதரப்பட்ட ரூ 119. இதில் அரித்துவாரமங்கலவாசியும் மிகச்சிறந்த தமிழபிமானியும் ஆகிய கனம் கோபாலசாமிரகுநாதராஜாளியாரவர்கள் கொடுத்தது ரூ 50. மதுரை தேவஸ்தான கமிட்டியாரும் பரம்பரைப்புண்ணிய சீலரும் தமிழாராய்ச்சி பெரிதுடையாரும் தமிழ்வித்துவான்கட்குப் பேருபகாரியும் சமயோஜிதமாகச் செய்யுள் செய்யும் வலிமை பெற்றவரும் ஆகிய மகா-ள-ள-ஸ்ரீ வயி. நாக. ராம. இராமநாதஞ்செட்டியாரவர்கள் அடியில்வரும் வெண்பாவைக் கூறி 20ரூ கொடுத்தார்கள்.

வெண்பா.

தன்மதுரை யாம்பாண்டிச் சாமி நடாத்துந் தமிழ்த்
தென்மதுரைச் சங்கஞ் செழித்தோங்க—நன்மனத்தால்
நாடியா ரும்புகழு நாவலீர் கேண்மினொரு
* கோடியா னீயுங்கொடை.

பின்னர் இச்சங்க ஸ்தாபகரும் பெரும்புகழ்க் குரிசிலுமாகிய ஸ்ரீமாந். பாண்டித்துரைஸாமியவர்களின் முயற்சியும் ஊக்கமும் வியந்து பாராட்டப் பெற்றன.

இச்சபையின் அக்கிராசநாதிபதி ஐயரவர்கள்மீது ஸ்ரீமாந். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களும், ஸ்ரீமாந். எம். கே. எம். அப்துல்காதிருராவுத்தரவர்களும் இயற்றிய கவிகளை வாசித்துக் காட்டியதுடன் அக்கவிகளை அச்சிட்டு ஒவ்வொரு பிரதி சபையாருக்கு அளித்தார்கள். முடிவில் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றுச் சபை கலைந்தது.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார் அவர்கள் இயற்றிய பாடல்கள்.

1. பலர்புகழ் மஹாமஹோ பாத்யாய பட்ட
மிலகுயர்வு நிற்கிந்த தென்பர்—சிலரே
மிகுசான்றோ ரக்கதுன்னை மேயுயர்ந்த தென்பர்
தகுசாமி நாதநீ தா.

2. உன்னையறி யாத்தமிழ ருண்டோவப் பட்டப்பேர்
தன்னையறி யாதாரோ சங்கையில—ரென்னிலைய
மென்னையது நின்னையெய்தி யேய்ந்ததுயர் வென்பதற்குத்
தன்னிகரில் சாமிநா தா.

வேறு.

3. குரவர்கள் பலரா வன்னோர் குழுவுளே பெரியோர் சில்லோர்
விரவுமப் பெரியோர் தம்மின் மேலவ னீயேயென்று
தெரிதந்து மஹாம ஹோபாத் தியாயவான் பட்ட நின்னை
உரிமையி னடியுற்ற தொண்டமி ழுகத்து மாதோ.

4. கோப்பெருந் தமிழ்ம டந்தை சுயம்வரங் குறித்துப் பூவின்
மீப்பொலி புலவ ரெல்லாம் விடுத்துமே தகுநி னக்கே
‡ மாப்பெருங் குரவப் பட்ட வண்மண மாலை வேய்ந்தா
ளேற்பவிக் ககறியா ரோவேந் திந்ததம் மாலை யென்பார்.

* கோடியென்பது இரத்தினக் கணக்கில் 20.
‡ மஹா மஹோபாத்யாயபட்டம்.

ஸ்ரீமாந் எம். கே. எம் அப்துல் காதிறுராவுத்தரவர்கள் இயற்றிய கவிகள்.

ஆசிரிய விருத்தம்.

மருதவளஞ் செறிகுடந்தை மாநகர்க்கு மாமகத்தால் வருமாண்பென்னப்
பொருவலிலாத் தமிழ்பயிற்றி வந்தநின்னு லுஞ்சீர்த்திபொருந்துந்தன்மை
கருதிமகாமகோபாத்தியாயரெனும் பட்டமிற்குக் கவினத்தந்தார்
திருவளர்மன்னவர் சாமிநாதவள்ளானின்போலச்சிறந்தார் யாரே. 1
என்னதா னங்களினு மன்னதா னஞ்சிறந்த தென்பார் பல்லோ
ரன்னதா னத்தினிலு மரியதுவித் தியாதான மதனைநாளு
நன்னர்செய்நீ தோன்றுநகர்க் குத்தமதா னப்பெயரை நன்கராய்ந்து
சொன்னவர்தம் மதிவலிதாஞ் சாமிநாதப்பெயர்கொள் சொல்வல்லானே. 2
மன்னரெலாம் விரும்புபுக ழுறும்பாண்டித் துரைமாலும் வாணரெல்லா
முன்னுபுக ழுறுஞ்சாமி நாதகவி சேகரனு மொருங்கன் புற்றுத்
துன்னு நித்ய நைமித்திய சபைத்தலைமை யுறச்சங்கந் துய்க்குமின்பைப்
பொன்னுலகத் தவரறிந்தாற் றம்வாழ்வை யொருநாளும் பொருட்பண்ணுரே
தன்னையடைந் தவர்பிழையெத் தனைசெயினும் பொறுத்தருளுந் தமதயாள
முன்னவன் பாண்டித்துரையும் புலவர்களு மின்பநனி முயங்கக்கூடற்
றுன்னியநாற் றமிழ்ச்சங்கத் தைந்தகவைக்கொண்டாட்டத்துழனிக்கண்ணே
மன்னுசபா நாயகனுஞ் சாமிநாதப் பெரியோன் வாழ்க மாதோ. 4
பஞ்சமா காவியங்கண் மிகமலிந்து நாடெங்கும் பரவச்செய்த
விஞ்சுபுக ழுறுஞ்சாமி நாதவித்வ சேகரனும் வேந்தர் வேந்தா
மஞ்சுநிகர் கொடைப்பாண்டித் துரைமாலு முயர்தமிழும் வாணரியாரு
மெஞ்சுதலில் லாவிந்தப் பெருஞ்சபையு நாடொறும்வாழ்ந் திலங்க மாதோ. 5

மறுதினம் காலையில் நடந்த தீர்மானங்களாவன.

1. புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீமத்-S. இராதாகிருஷ்ணையரவர்கள் சர்வகலா சங்கத்தார், சுதேசபாஷைப் பயிற்சிக்கேற்பட்டு நடந்துவரும் விதிமுறைகளை இப்போது மாற்றுவதாக எண்ணங்கொண்டிருத்தலில், தமிழ்போன்ற பழைய பாஷைகளின் அபிவிர்த்திக்கு உண்டாகும் பெருந்தடைகளைப் பற்றி அரைமணிவரை சபையோர்க்கெல்லாம் கிளர்ச்சியுண்டாகும்படி எடுத்து மொழிந்து, பின்னர்,

"மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையும், தற்கால பீ. ஏ. பரீக்ஷையில், எப். ஏ. அல்லது நடுத்தரபரீக்ஷையும் பழையவிதிப்படியே இருக்கவேண்டியது அவசியமென்று சர்வகலாசபையார்க்கும், அவசியமானல், கவர்மெண்டாருக்கும் விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்" என்பது.

2. யூனிவர்சிட்டி முதலியவற்றுக்கு மேற்குறித்த விஷயத்தைப்பற்றித் தக்கபடி ஒருவிண்ணப்பஞ்சித்தப்படுத்துவதற்காக் ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள், ஸ்ரீமத்- J. M. நல்லசாமி பிள்ளையவர்கள், ஸ்ரீமத்-S. இராதாகிருஷ்ணையவர்கள், ஸ்ரீமத்- S. சாமிநாதையரவர்கள் இவர்கள் முதலிய ஆலோசனைக் கூட்டத்தார் நியமிக்கப் பெறவேண்டுமென்பது.

3. தனித்தமிழ்ப் பரீக்ஷையில் இலக்கண பாடத்துக்கு 60–அம்சமும் இலக்கியபாடத்துக்கு 90-அம்சமும் ஏறபடுத்த வேண்டுமென்பது.

4. சாஸ்திரசம்பந்தமான சொற்களைத்தேடிச் சேர்த்தும், புதியவாயுண்டாக்கியும் சங்கத்தார் அங்கீகாரத்தின்மேல், அவற்றைச் "செந்தமிழில்"; வெளியிட வேண்டுமென்பது.

மாலையில் நடந்த தீர்மானங்கள்.

ஸ்ரீமத்-J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் காலையில் விவகாரத்திற்குள்ளாகி முடிவுபெறாமல் நாழிகையானதென்று தள்ளிவைக்கப்பட்டிருந்த 'சங்கக் கமிட்டி' என்ற பிரேரேபணையைக்குறித்து, அடியில்வருமாறு முடிவு படுத்தினார்கள்:—இசசங்கம் நன்குநடைபெற்று வருதற்கான விதிகளை ஏற்படுத்த சங்கத்தலைவர் ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்கள், ஸ்ரீமத்-J. M. நல்சாமிபிள்ளையவர்கள், மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள், ஸ்ரீமத்-P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள், ஸ்ரீமத்-S. சாமிநாதையரவர்கள்: ஸ்ரீமத்-V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள், இவர்கள் முதலிய ஓர்' சப்கமிட்டி'தாபனமுறல் வேண்டும் என்பது.

6. ஸ்ரீமத்-S. சாமிநாதையரவர்கள் இச்சங்கத்தின் மாதாந்தக் கணக்குப் பரிசோதகராகவும், திருநேல்வேலி பென்ஷன் சப்மாஜிஸ்திரேட் ஸ்ரீமத்-T. பொன்னுசாமி பிள்ளையவர்கள் அதன் வருடாந்தக் கணக்குப் பரிசோதகராகவும் இருத்தல் வேண்டு மென்பது.

7. ஒரு ரூபாவுக்குமேல் விலையுள்ள சங்கப்பதிப்புப் புத்தகங்கள் சங்கத்தினங்கத்தவர்க்கு விலைக்கே கொடுக்கப் பெறவேண்டுமென்பது.

8. ஸ்ரீமத்-S. சாமிநாதையரவர்கள் சங்கத்தின் துணைக்காரிய தரிசியாக நியமனம் பெறல்வேண்டுமென்பது.

9. இச்சங்கத்தின் கௌரவபோஷகராக விரும்புவோரைச் சிலநிபந்தனைகளின்மீது ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்பது.

10. வருஷந்தோறும் சங்கத்திற்கு ரூபர 6 ம் செந்தமிழ்ச்சந்தா ரூபா4 ஆக ரூபா 10 நன்கொடையளிப்போரே மேற்குறித்த 'கௌரவ போஷகர்' என்பது.

முற்கூறியவிதிநிரூபணம் முடிந்ததும் மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீமத் வே. சாமிநாதையரவர்களது அக்கிராசனத்தின் கீழ் அடியில்வரும் சிறந்த வியாசங்களும் பிரசங்கங்களும் நடைபெற்றன.

1. ஸ்ரீமத். P. S. சுந்தரமையரவர்கள் B. A., L. T. "இருபத்திரண்டு சுருதிகள்" என்னும் விஷயமாக ராவ்பகதூர் ஸ்ரீமாந். நாகோஜிராயரவர்கள் எழுதியதைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சுருதிகள் இன்னின்னவை யென்று சபையோர்க்கு விளக்கிக் காட்டினார்கள்.

2. ஸ்ரீமத் S. இராதாகிருஷ்ணையரவர்கள் "தமிழிசை" என்பதைப் பற்றி தாம் நெடுங்கால முயன்று ஆராய்ந்துவரும் விஷயத்தை இனிய பிரசங்கவாயிலாக வெளிப்படுத்தினார்கள். ஸ்ரீநாகோஜிராயரவர்கள் கண்டு பிடித்த 22 சுருதிகள் தமிழிலுமுண்டென்று ஐயரவர்கள் காட்டியதும் பிறவும் வியக்கத்தக்கனவாயிருந்தன.

3. ஸ்ரீமத். பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் "ஊக்கமுடைமை" யென்னும் விஷயமாக ஆராய்ச்சி காட்டி எழுதிய வியாசம் அவர்களால் சபையோர் மகிழ்வுறப் படிக்கப்பெற்றது.

4. ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்களைப்பற்றி ஸ்ரீமத் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள் இயற்றிக்கொணர்ந்த 'மருதப்பாட்டு' என்னும் நூலை, அவ்வையரவர்களே அரங்கேற்றினார்கள். சபையோரெல்லாம், அது சங்கவாக்குப்போலவே அமைந்திருந்ததுபற்றி வியந்து கூறினார்கள். வேம்பத்தூர் ஸ்ரீமத்-பிச்சுவையரவர்களும், ஸ்ரீமத். அருணாசலக்கவிராயரவர்களும் இதற்குச் சிறப்புப்பாயிரக்கவிகள் கூறினார்கள்.

இவ்வாறே அன்று கூட்டம் முடிந்தது.

26௳ காலை.

முந்தியநாட் கூட்டத்துக்கு வந்திருந்த சங்க வித்துவான்களும் பிறரும் 26௳ காலை 8-மணிக்கு மறுபடியுங் கூடினார்கள். அச்சபைக்கு மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீமத் சாமிநாதையரவர்களே அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார்கள். அப்போது அடியில்வரும் விஷயங்கள் நடந்தேறின.

1. ஸ்ரீமத் S. பால்வண்ணமுதலியாரவர்கள் சித்தாந்த சாஸ்திரங்கள் பலவற்றை ஆராய்ந்து யாவரும் சைவசமயவுண்மைகளைத்தெரிந்துகொள்ளும்படி இயற்றிக்கொணர்ந்த "சித்தாந்தஞானரத்நாவளி" என்னும் நூல் அரங்கேற்றப்பட்டது. இதனைப் பலரும் உவந்து ஏற்றார்கள். ஸ்ரீமத். மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் இந்நூற்குச் சிறப்புப்பாயிரமாக அடியில்வரும் பாடலைக் கூறினார்கள்.

மாநலச்சிந் தாமணியா தியபலவு மண்ணினளி வழங்கி னேன்வேள் [ன்
தானெனச்சொல் சாமிநா தப்பெரியோன் ஸ்ரீதன்மதுரைச் சங்கத் தார்மு
தேனனைய பதினொன்கு சாத்திரவா ரிதிபடிந்து திகழ்சித் தாந்த
ஞானரத்தி னவளியைப் பால்வண்ண முகிறருமின் னாணன் னுளே.

2. ஸ்ரீமத் நா. வேதாசலம்பிள்ளையவர்கள் தாம் ஆராய்ச்சி செய்தெழு திக்கொணர்ந்த "பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை" என்னும் வியாசத்தை இனிமையுறப்படித்தனர். இதனடையழகும்பொருளழகும் சபையோராற்பா ராட்டப்பட்டன. இந்நூற்கும் ஸ்ரீமத் கந்தசாமிக்கவிராயரவர்களே அடியில் வரும் பாயிரமொன்றளித்தார்கள்.

மருவுபுக முக்கிரபாண் டியன்வளர்க்குந் தமிழ்ச்சங்க மாட்டுப் போந்து
பெருகுதமிழ் நூற்பாலை யுணருமோர் சம்பந்தம் பெற்றுக் கற்றோர்
உரியததி யாய்ந்துநன்கு மதித்துவே தாசலனு ருரைத்தல் சொல்லற்
கரிதெனினு மேயமிதே யாகுமென்பேன் விருந்தருந்து மறிவுள் ளீரே.

இதனோடு அன்று பகற்கூட்டங்கலைந்து மாலை 3மணிக்கு மஹாமஹோ பாத்தியாயரவர்கள் அக்கிராசனத்தின்கீழே மறுபடியுங்கூடிற்று. அப்போது

1. ஸ்ரீமத் ஐ. சாமிநாதமுதலியாரவர்கள் தாம்பலவற்றையும் ஆராய்ந்து எழுதிவந்த "முன்னாள்—இந்நாள்" என்னும் வியாசத்தை சபையோர் மகிழ்வுறப்படித்தார்கள்.

2. வருஷோற்சவத்துக்கு வந்திருந்த ஸ்ரீமத். வை. மு. சடகோபராமா நுஜாசாரியாரவர்கள், சில அவசரச்செய்தியால் ஊருக்குப்பிரயாணிக்க நேர்ந் ததுபற்றி அவர்கள் எழுதிய "ஸ்ரீபட்டர் வைபவம்" திருவாரூர் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சந்தானமையங்காரவர்களால் நனிகு படிக்கப்பட் டது.

3. பெங்களூர் சென்றல் காலேஜ் போதகாசிரியராகிய ஸ்ரீமத். S. கிரு ஷ்ணசாமி ஐயங்காரவர்கள் M. A., சங்கக்கூட்டத்தின்பொருட்டெழுதியனுப் பிய "கடைவள்ளலார்காலம்" என்னும் வியாசம் மு. இராகவையங்காரவர் களால் நன்கு படிக்கப்பட்டது.

4. திருவனந்தபுரம் ஸ்ரீமத்-T. லெக்ஷ்மணபிள்ளையவர்கள், B. A. தாம் எழுதியுள்ள "இரவிவர்மன்" என்னும் நாடகத்திற் சிற்சில பகுதிகளைச் ச பையோர் புகழப்படித்து மகிழ்வித்தார்கள்.

5. ஸ்ரீமத்- M. K. M. அப்துல் காதிறு ராவுத்தரவர்கள், தாமியற்றிய "தமிழ்ச்சங்கமான்மியம்" என்னும் நூலிற் சிலபாடல்களை எல்லாரும்உவக்க ப் படித்தார்கள்.

6. சென்னைப்பச்சையப்பன் கலாசாலைப் போதகாசிரியர் ஸ்ரீமத்-S. இராஜகோபாலாசாரியரவர்கள் எழுதியனுப்பிய "சுதேசகலாசாலை ஸ்தாபனம்" என்னும் வியாசம் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்களால் படிக்கப்பட்டது.

இவற்றின் முடிவில் ஸ்ரீமத்-மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அடியில்வரும் சிறந்த பாடலைக்கூறி அதன் பொருளையும் விரித்துரைத்தார்கள்.

கரப்பணியா மகிழ்பாண்டித் துரைவலவன் கைக்கொள்வளை கடுப்பச் செங்கை
மீப்பொலியு நாற்சங்க மிளிர்மணிக ணிகர்த்தபல வித்து வான்கள்
நாப்பொழியும் பிரசங்கம் பிரசங்கம் பொழிந்ததென நாமுட்கொண்டோம்
பூப்பயிலு மிப்பிறவி யெடுத்தநல மடுத்ததெனப் புகல்வாமன்றே.

வேம்பத்தூர் வித்துவான் சிலேடைப்புலி ப்ரும்மஸ்ரீ பிச்சுபாரதியவர்களியற்றியது.

சைவந் தழைக்குமிடஞ் சாத்திரமீ தோங்குமிடந்
தெய்வப் புலவர் குழாஞ் சேருமிடங்—கைவரை சேர்
துன்னலர்தாழ் பாண்டித்துரைப்பூ பதிவளர்க்குங்
கன்னிபுர மேவியசங்கம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா குன்னூர் பெரியவீடு வித்துவான் ஸ்ரீமாந்-குமாரசாமி முதலியாரவர்கள் இயற்றிய செய்யுள்.

சுப்பிரமணிய்சாமி தொண்ட னென்றித்
தொல்லுலகோ ரெல்லவருஞ் சொல்லவல்ல
விப்பிரசிகாமணியாஞ் சாமி நாத
மேலோன்முத் தமிழ்ச்சங்க மேவிவித்த
சுப்பிரபுவாம்பாண்டித் துரைமால் வேண்டக்
கனிவொடுபன் னூற்பிரசங் கஞ்செய்தான்முந்
தப்பிரம னும்மதைக் கேட்டுள்ளா னந்தித்
தானென்று மிவன்பெருமை சாற்றற்பாற்றே.

மறுநாட்காலையும், இவ்வித்துவக்கழகம் ஸ்ரீமாந் பாண்டித்துரைத்தேவரவர்களின் அக்கிராசனத்தின் கீழ்க்கூடியது. அப்போது

1. ஸ்ரீமத் M. R. கந்தசாமிக்கவிராயரவர்கள் தாமியற்றியுள்ள குமணசரித்திரத்தில் சில பகுதிகளைப் படித்துக்காட்டிச் சபையை மகிழ்வித்தார்கள்.

2. ஸ்ரீமத் மாம்பழக்கவிச்சிங்கநாவலரின் வமிசத்தவராகிய மார்க்கயன் கோட்டை வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ பழனிச்சாமியாசாரியாரவர்கள் ஷை நாவலர் அவ்வவ்க்காலத்தில் இயற்றிய தனிப்பாடல் சிலவற்றைக்கூறி மகிழ்வித்தனர்.

முடிவில், ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அடியில்வரும்அழகிய பாடலைக்கூறி சாலியமங்கலம் ஸ்ரீமத் சாம்பசிவநயினாரவர்கள் கொடுத்த அருமையான வில்லைமாலை யொன்றை ஸ்ரீமாந் பாண்டித்துரைத்தேவரவர்கட்கு மஹாமஹோபாத்தியாயரவர்களைக் கொண்டு புனைவித்தார்கள். இந்த நயினாரவர்கள் இவ்வில்லைமாலையை இதற்கென்றே செய்வித்துக் கொணர்ந்தார்கள். அம்மாலையைத் தேவரவர்கட்குப் புனைந்தவுடன் எல்லாப்பக்கமும் வாசிப்பதாயிற்று. அக்காலையில் தேவர் கோமானவர்கள் எழுந்து மாலையையும், அத்துடன் பாமாலையும் கலந்து புனைவித்த கவிராயரவர்களையும், அக்கவியையும் பற்றி வியந்து நன்கு பேசினார்கள். அக்காட்சி மிகவியக்கத்தக்கதே.

மாதவத்தான் மழைவேண்டிப் போயகத்தாற் கரியனிட்ட மாலை தாங்கிப்
பூதலத்தார் செழியனைக் கதினைவற்று லுஞ்சிறப்புப் பொருந்தோ ராரம் [நீ
காதலித்தேம் அணிகின்றேம் உக்கிரபாண் டியப்பெயர்கொள் காவல் லோய்
மேதகச்சேர் சீர்த்தியொடு வாழவிறை யருட்பெருக்க மிளிர்க வென்றே.

இவற்றோடு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம்வருஷோற்சவம் பூர்த்திபெற்றது. சுபம்.

கவிராஜநெல்லையப்ப பிள்ளை.

சமாசாரக் கொத்து.

இம்மாதம் 14உ திங்கட்கிழமையன்று வங்காள மாகாணத்தில் தோரக்பூர் என்றவிடத்தில் பெருத்த மணற்காற்றடித்து மிகவும் அகோரமான மழை பெய்தது.

* * * * *

பெர்ஷியா தேசத்தரசர் கொடிய உஷ்ண நோயாலும் வாத நோயாலும் வருந்திக்கொண்டிருக்கிறார். இவர் சொற்பம் குணப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

* * * * *

கல்கட்டாவில் சில காபூலின் ஜனங்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள். கடன் வாங்கினவர்கள் குறிப்பிட்ட தேதியில் கொடுக்கத் தவறினால் அவர்களை அடித்துத் தொந்தரவு செய்கிறார்களாம்.

* * * * *

பெர்ஷியாவிலும் மத்திய ஏஷியாவிலும் உண்டாயிருக்கும் தகரார்களைத் தீர்த்துக்கொள்ளும்படியாக இங்கிலாண்டுக்கும் ருஷியாவுக்கும் கூடிய சீக்கிரம் ஓர் உடன்படிக்கை செய்யப்படுமென ஓர் ஆங்கிலப்பத்திரிகை கூறுகின்றது.

* * * * *

இராஜப் பிரதிநிதியின் சட்டநிருபண சபையில் பிரதிநிதி மெம்பர்களை அதிகப்படுத்த வேண்டுமெனக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு மிஸ்டர் மார்லி பதில் கூறியபோது இப்படி அதிகப்படுத்த வேண்டியதில்லையெனச் சொல்லியிருக்கிறார்

* * * * *

பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மேற்கு ஆப்பிரிக்காக் கப்பற்படைகளை கலைத்து விடப்படுமென்றும் இக்கப்பற் படையைச் சேர்ந்த கப்பல்கள் கீழ் இந்த கப்பற்படையுடன் சேர்க்கப்படுமென்றும் 'டெயிலி டெலிகிராப்' பத்திரிகை கூறுகின்றது.

* * * * *

பிரிடிஷாருக்குச் சொந்தமான "டிரட்நாட்" என்ற யுத்தக்கப்பலுக்குச் சமானமான ஒரு பெரிய யுத்தக்கப்பல் கட்டும்படியாக இருபது லக்ஷம்

பவுனும் விங்கு தோணிகள் கட்டுவதற்காக பத்துலக்ஷம் பவுனும் செலவழிக்க அமெரிக்கா கவரன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * * * *

ரோமன் காதலிக் கிறிஸ்தவர்களுக்கெல்லாம் பிரதம மத குருவாகிய போப் வாத நோயால் பீடிக்கப்பட்டுப் படுத்தபடுக்கையிலிருக்கிறார். இருதய நோவாலும் அவஸ்தைப்படுகிறாராம். கூடியசீக்கிரம் சௌக்கியமடைந்து துன்பத்தினின்றும் நீங்கும்படி பகவான் கருணை புரிவாராக.

* * * * *

மதிராஸ் ரெயில்வேயில் நாகரீகமாகவும் சுத்தமாகவும் வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேஷன்களுக்கும் தோட்டங்களுக்கும் இடையிலிருக்கும் பிளாக் ஸ்டேஷன்களுக்குமாக மதிராஸ் ரெயில்வே ஏஜண்டு அண்டமானேஜரால் வருடாவருடம் வெகுமதி யளிக்கும்படி புதுச்சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

* * * * *

ஓர் ஐரோப்பியத் தோட்டக்காரர் கோவத்தி என்ற இடத்திலிருந்து கல்கத்தாவில் பிரசுரமாகும் " ஸ்டேஸ்மன் " பத்திரிகைக்கு ஸர். பி. புல்லருடைய அரசாட்சி முறைகளைக் கண்டித்து எழுதியிருக்கிறார். இதே மாதிரியாகவே " இங்கிலீஷ்மன் " பத்திரிகைக்கு ஓர் ஐரோப்பியத் தோட்டக்காரர் எழுதியிருக்கிறார்.

* * * * *

வங்காளப் புது.மாகாணத்தில் சுதேசியப்பற்றுக்காட்டியதற்காகப் பள்ளிக்கூடங்களிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களை யெல்லாம் மறுபடியும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கூட்டங்கூடித் தெருவழியாய்ச் செல்லக் கூடாதென்ற உத்தரவை ரத்து செய்துவிடவேண்டுமென்றும் மிஸ்டர் மார்லி உத்தரவனுப்பி இருக்கிறார்.

* * * * *

மேமாதம் இரண்டாம் வாரத்தில் இந்தியா முழுவதும் 13.207 பேர்களுக்குப் பிளேக் நோய் கண்டு 11,414 பேர் மரித்திருக்கிறார்கள். பம்பாயிலும் ஸிந்திலும் 1371 பேரும் சென்னையில் 4 பேரும் வங்காளத்தில் 432 பேரும் ஐக்கிய மகாணங்களில் 1271 பேரும்,பஞ்சாபில் 7896 பேரும் பர்மாவில் 125 பேரும் மத்தியமாகாணங்களில் 31 பேரும் மத்திய இந்தியாவில் 23 பேரும் ராஜபுதனத்தில் 32 பேரும் மரித்தருக்கிறார்கள்.

குடியேற்ற நாடுகளுக்கு எப்படிச் சுயாட்சி கொடுக்கப் பட்டிருக்கிறதோ அப்படியே இந்தியாவுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென மிஸ்டர் ஓ. கிராடி என்ற ஐரிஷ் மெம்பர் பார்லிமெண்ட் சபையில் கேள்வி கேட்ட போது இக்கேள்வியின் கருத்து மிகவும் சிலாக்கிய மானதென்றும் ஆனால் சுயாட்சி கொடுப்பதில் அநேகம் திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பதால் தம்மால்முடியாதென்றும் மிஸ்டர் மார்லி பதில் கூறினர். சிலாக்கியமென்ருவது சொன்னரே அதுவே ஒரு கௌரவந்தான். இந்தியாவின் நிலைமை என்றைக்கு உயருமோ எல்லாவற்றிற்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா.

* * * * *

இங்கிலாந்தில் வேலைக்காரர்கள் வேலை செய்யாது ஒரே கட்டுப்பாடாய் நின்றுபோனாலும் இவர்களுக்குப் பதிலாக வேறுவேலைக்காரர்களை அந்நிய தேசங்களிலிருந்து கொண்டுவரக் கூடாதெனப் பார்லிமெண்டு பிரதிநிதிச் சபையார் ஒரு மசோதாவை அங்கீகரிக்க அதனை லார்ட்ஸ் சபையார் அங்கீகரிக்கவில்லை. இதனல் லேயர் கக்ஷி மெம்பர்களுக்கு மிகுந்த கோபம் உண்டாயிருக்கிறது. ஜனங்களுக்கு உத்தரவாதமில்லாத லார்ட்ஸ் சபையை இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் வைத்திருக்கலாமென இந்தக் கக்ஷிமெம்பர்கள் பார்லிமெண்டு பிரதிநிதிச் சபையில் 16ட புதன்கிழமை யன்று கண்டிப்பாய்ப் பேசினர்கள்.

* * * * *

ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் முடிந்து சாமதானம் செய்யப்பட்டபோது ருஷியர்கள் மஞ்சூரியாவை விட்டுப் போய் விடவேண்டுமென்றும், மஞ்சூரியாவானது இவர்கள்வசம் ஒப்பிக்கப் படவேண்டு மென்றும் நிபந்தனைகள் ஏற்படுத்தப் பட்டன. இந்த ஏற்பாட்டின்படி ருஷியர்கள் இன்னும் மஞ்சூரியாவைவிட்டுப் போகாமல் காலதாமதம் செய்துகொண்டிருக்கிருர்கள். ஆகையினலே ஜப்பானியர்களும் இன்னும் மஞ்சூரியாவை விட்டுப்போகவில்லை. விஷயங்கள் இபபடி இருப்பதினலே ருஷியர்களும் ஜப்பானியர்களும் ஒருவர் செய்கையை யொருவர் கவனித்துக் கொண்டிருக்கிருர்கள். மஞ்சூரியாவில் ருஷியர்கள் அக்கிரமஞ் செய்து வருகிருர்களென்றும், சீனப்படைகளின் நிலைமையைப்பற்றித் தமக்குத் தெரிவிக்கும்படியாகச் சீனப்பெரிய ராணியார் யூபான்ஷிக்கேயின் வைஷிராய்க்குக்கட்டளையிட்டிருக்கிருரென்றும், சண்டைநேரிட்டால் அதற்குச் சீனகவர்ன்மெண்டார் ஆயத்தஞ் செய்து வருகிருர்களென்றும் தந்தியொன்றுகொழும்பு மார்க்கமாய் வந்திருக்கிறதாக அறிகிறோம்

ரெய்ப்பூபிலிருந்து விசாகபட்டணத்துக்கு ரெயில் போவேது இப்போது நிச்சயமாகிவிட்டபடியால் விசாகபட்டணம் துறைமுகத்தை விருத்தி செய்யவேண்டிய விஷயத்தைப்பற்றிக் கவர்ண்மெண்டார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

* * * * *

திரிசிரபுரம் மலைமேலுள்ள கோவில் கோபுரத்திலிருந்த பொன் மூலாம் பூசின ரூபா 4000 பெறுமான கலசத்தைத் திருடினகுற்றவாளிகளாகிய ஜாக்கி சுப்பிரமணிய ஐயருக்கும் நாகநாதனுக்கும் திருச்சி செஷன்கோர்ட்டில் முறையே 5வருஷத்துக்கும் 2 வருஷத்துக்கும் கடினகாவல் சிக்ஷை விதிக்கப்பட்டது.

* * * * *

இலங்கைத் தீவு படிப்பிலே மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறபடியால் அங்குக் கீழ்த்தரப்படிப்பை விருத்திசெய்யும்படி குடியேற்ற நாட்டுமந்திரி ஏதாகிலும் முயற்சி செய்கின்றனரா என்று மிஸ்டர் ஷிவான் பார்லிமெண்டிலே ஒரு கேள்வி கேட்க அதற்கு உத்தரம் சொன்ன குடியேற்ற நாட்டு அண்டர் சிக்ரெடரி அத்தீவு முழுவதிலும் கூலிகளின் பிள்ளைகளுக்குக் கீழ்த்தரப்படிப்பு சொல்லிவைப்பதற்கான முயற்சி துரிதமாய் நடந்துவருகிறதென்று சொன்னார்.

* * * * *

ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் கொரியா முன்னிட்டு மனத்தாங்கல் உண்டாயிருக்கிறதென்றும் கொரியா மீது ஜப்பானியர்களுக்கு யாதொரு விதமான அதிகாரமுமில்லை யென ருஷியர்கள் உறுதியாய் வாதிக்கிறார்களென்றும் ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் செய்யப்பட்டஉடன்படிக்கையின் பிரகாரம் கொரியா சுயாதீனம் பெற்றதென ருஷியர்கள் கூறுகிறார்களென்றும் டோகியோவிலிருந்து சமாசாரம் வந்திருக்கிறது, இங்கிலாந்து தேசத்தாரும் ஜப்பானின் பக்கமாகப் பேசுகிறார்களாம்.

* * * * *

துருக்கிக்கும் ஈஜிப்டுக்கும் எல்லையை ஏற்படுத்தும்படியாக நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷன்களில் காப்டன் ஓவென் என்பவரும் ஈஜிப்ட் தேசத்துப் பிரதிநிதிகளாவர். ராபா என்ற இடத்தில் நாட்டப்பட்டிருந்த எல்லைக்கற்கள் துருக்கிக்காரர்களால் பிடுங்கி யெறியப்பட்டன. நம் நேயர்களுக்குத் தெரியும். அக்கற்கள் எந்த இடத்தில் நாட்டப்பட்டிருந்தனவோ அந்த இடத்திலேயே பழையபடியும் நாட்டப்பட்டிருக்கின்றன.

விம்லாவில் அடிக்கடி பூமியதிர்ச்சிகள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. சென்ற 18வ வெள்ளிக்கிழமையன்றும் அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்றும் பூமியதிர்ச்சிகள் நேரிட்டன. வெள்ளிக்கிழமையன்று நேரிட்ட பூமியதிர்ச்சியால் கட்டிடங்கள் குலுங்கிப்போயின. எந்த இடத்தில் சுகமிருக்கிறதோ அந்த இடத்தில் அபாயத்தையும் ஏற்படுத்திய கடவுளின் அற்புத ஞானத்தை என்னென்று கூறுகின்றது. மனிதன் சுகத்தில் அழுந்தித் தன்னை மறந்துவிடுவானே என்ற கருணையால் இடை இடையே அபாயங்களையும் உண்டாக்கி தன்னினைப்பை மதிகெட்ட மனிதருக்கு உளட்டி வருகின்றார்போலும்.

* * * * *

இம்மாதம் 8வ செவ்வாய்க்கிழமையன்று பார்லிமெண்டு சபையில் ஸர் ஹென்ரி காட்டன் கேட்டகேள்விஒன்றுக்கு மிஸ்டர் மார்லி பதில் சொல்லியபோது வங்காளமாகாணப் பிரிவினைவிஷயமாகத்தோன்றியிருக்கும் ஆத்திரத்தை முன்னிட்டு ஒற்றுமை உணர்ச்சிப்போக்கும் அநுதாபத்தோடு நடக்கவேண்டுமென்பதே வங்காளகவரண்மெண்டாருடையவும் இந்தியா கவரன்மெண்டாருடையவும் நோக்கமென்றும் ஜனங்கள் மனத்தில் தோன்றிய ஆத்திரத்தை அமைதிப்படுத்தச் சகலமும் செய்யப்படுமென்றும் கூறினார். இம்மகானைப்போன்ற மந்திரி ஏற்படாவிட்டால் இச்சமயத்தில் பங்காளிகள்பாடு திண்டாட்டமாகவே முடியும் என்பதற்கையமில்லை.

* * * * *

பார்லிமெண்டிக்கு மெம்பர்கள் தெரிந்தெடுப்பதில் தங்களுக்கும் வோட்டுகள் வேண்டுமென இங்கிலாந்திலுள்ள பெண்கள் வாதம் செய்துவருவது நம்மோர்களுக்குத் தெரியும். இப்பெண்களிற் சிலர் சென்ற 12வ சனிக்கிழமையன்று பிரிட்டிஷ் முதன் மந்திரியாகிய ஸர்ஹென்ரிகாம்பல் பானர் மனுடன் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர் இவ்விஷயத்தில் தமக்கு மிகவும் அநுதாபமுண்டென்றும் கவரன்மெண்டார் இதைப்பற்றி ஒற்றுமையான அபிப்பிராயம் கொள்ளுகிறவரையில் பெண்களெல்லாம் பொறுமையாகக் காத்திருக்கவேண்டுமென்றும் கூறினர்.

* * * * *

கல்கத்தா முனிஸிபாலிட்டி ரெவனியூ [கலெக்டர்] டிபார்ட்மெண்டில் 16000 ரூபா மோசஞ்செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு குமாஸ்தாக்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் ஒரு குமாஸ்தா ஓடிப்போய்விட்டதாகவும் தெரியவருகிறது. வெகு நாளாகக் கொஞ்சங் கொஞ்சமாய்த் திருடப்பட்டதாகவும் தெரிகிறது. சரியான மேற்பார்வை இல்லாததினாலேயே இப்படி நடந்ததாகவும் சொல்லப்படுகிறது.

சுரேந்திரநாத் பானர்ஜி வகையறாக்கள் மாஜிஸ்ட்ரேட் எமெர்ஜன் கம்பெனியார் மீது கொடுத்திருக்கும் பிராது.

*பாரிஸால் மாகாணக் கான்பரன்ஸைக் கலைத்ததின் பொருட்டுச் சுரேந்திரநாத் பானர்ஜி, எ. ரஸுல், யாத்ரா மோஹன் ஸேன், அநந்த பந்துகுஹ, மதிலால் கோஷ், ஆநந்த சந்திரராய், அச்வினி குமாரதத், யதீந்திரநாத்ராய், சௌதரி முதலானவர்கள் மாஜிஸ்ட்ரேட் எமெர்ஸன் மீதிலும், போலீஸ் அதிகாரி கெம்ப் மீதிலும் மானநஷ்ட ரூபா 10500-க்கு ஸப் ஜட்ஜி கோர்ட்டிலே பிராது கொடுத்திருக்கிறார்கள். இதில் வெற்றி கிடைக்குமோ அல்லது தோல்வி கிடைக்குமோ என்பதை அளவிட்டுக் கூறுவது இப்போது சாத்தியமில்லை. ஒருவேளை இதிலும் எமெர்ஸன் கம்பெனியார் அவமானப் பட்டுப் போகும் விஷயத்தில் நம்மவர்களுக் கெல்லாம மிகுந்த திருப்தி யுண்டாகு மென்பதில் ஆக்ஷேபமே கிடையாது. ஆனால், கோர்ட்டு வெற்றிகளில் நமது பெங்காளி சகோதரர்களுக்கு ஏற்படும் உற்சாகம் நமக்கு ஏற்படவில்லை யென்பதை இங்கே அறிவித்து விடுதல் பொருந்தும், ஏனென்றால். இவ்விதமான அற்பசந்தோஷங்கள் முக்கியமான குறைவுபாட்டை சிறிது மறைத்து விடுகின்றன. ஆதலால் இவ்விதமான அற்பசந்தோஷங்கள் ஏற்படாமல் தடுத்துக்கொள்வது ஜனத் தலைவர்களின் கடமையாகும்.

* * * * *

மிஸ்டர் முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள் பீ. ஏ. காலஞ் சென்றார்

திருவனந்தபுரம் மகாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய மிஸ்டர் முத்து ராமலிங்கம் பிள்ளை பி. ஏ. சென்ற வியாழக்கிழமை யன்று காலை இறந்துபோய் விட்டாரென்று அறிந்து மிகவும் விசனமடைகின்றோம். இவர் இறக்கும்போது சுமார் 35 வயது தான் இருக்கும் இவர் சாதாரணமான தமிழ் விற்பன்னர்களைப் போலின்றி, தாய்ப் பாஷையின் உண்மையான சுவையை அறிந்த அநுபவ ஞானி. இங்கிலாந்திலே "ஷேக்ஸ்பியர் திருநாள்" கொண்டாடுவது போலத் தமிழ் நாட்டிலே "கம்பர் திருநாள்" கொண்டாடுதற் குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டு மென்ற ஆவல் இவருக்கு மிகுதியாக இருந்தது. இவர் "கிருபாமாலை" என்பதாகக் காலஞ்சென்ற டாக்டர் சத்தியநாதனுடைய முதல் மனைவியாகிய கிருபாபாயின் மரணத்தைப்பற்றிப் பிரலாபித்து ஒரு சிறிய நூல் எழுதியிருக்கின்றார். இவர் பிரிவாற் கவலையுறாத தமிழ் மக்கள் இரார்.

பத்திராதிபர்.